

# இஸ்லாத்தின் அடிப்படைகள்

மூலம்

ஹமூத் பின் முஹம்மத் அல்லாஹிம்

தமிழாக்கம்

நஸ்பர் சித்தீக் (கபூரி)



PERATIVE OFFICE FOR CALL AND GUIDANCE IN AL-BATHA
(UNDER THE SUPERVISION OF THE MINISTRY OF ISLAMIC AFFAIRS)
P.B.No 20824 - Riyadh 11465 K.S.A.
Tel. 4030251 - 4083405 FAX. 4059387

52

# இஸ்லாத்தின் அடிப்படைகள்

மூலம்
ஹமூத் பின் முஹம்மத் அல்லாஹிம்

தமிழாக்கம்
நவ்பர் சித்தீக் (கபூரி)

(ح) المكتب التعاوني للدعوة والإرشاد بالبطحاء، ١٤١٦هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

اللاحم، حمود بن لاحم

مبادىء الإسلام

ترجمة نوفر صديق غفوري .

٧٢ ص ؛ ١٢×١٧ سم

ردمك : ٧-٢٦-٧٩٨-٩٩٦٠

( النص باللغة التاميلية )

١ - الإسلام - مباحث عامة

٢- الإيمان ( الإسلام )

أ - غفوري، نوفر صديق ( مترجم ) ب - العنوان

ديوي ٢١١ ١٦/٠٦٦٩

رقم الإيداع: ١٦/٠٦٦٩

ردمك : ٧-٢٦-٧٩٨-٩٩٦٠

**COOPERATIVE OFFICE FOR CALL AND GUIDANCE IN AL- BATHA**

UNDER THE SUPERVISION OF
MINISTRY OF ISLAMIC AFFAIRS,
ENDOWMENTS, PROPAGATION AND GUIDANCE

PO. BOX:20824 RIYADH.11465

00966-1 — 4030251 / 4034517 / 4031587 / 4030142

FAX 4059387

Lecture hall. Tel + Fax: 00966- 1- 4083405

© All rights reserved for the Office

No part of this book may be used for publication without the written permission of the copyright holder, application for which should be addressed to the office

# இஸ்லாத்தின் அடிப்படைகள்

இப்புவியில் வாழும் அனைவரும் பல மதங்களைச் சார்ந்தவர்கள். அம்மதங்களுக்குப் பல பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன. அப்பெயர் ஒரு குறிப்பிட்ட மனிதனையோ, அல்லது ஒரு சமூகத்தையோ சார்ந்ததாக இருக்கின்றது. மஸீஹிய்யா என்னும் கிறிஸ்தவ மதம் அல்மஸீஹ் என்னும் ஏசு கிறிஸ்துவின் பெயரைச் சார்ந்தது. புத்த மதம் புத்தரின் பாலும், தர்தஸிய்யா என்னும் கோட்பாடு அதைக் கொண்டு வந்த தர்தஸிய் என்பவர் பாலும், யூத மதம் யஹூதர் என்னும் யூத கோத்திரத்தின் பாலும் சார்ந்துள்ளது. ஆனால் இஸ்லாம் இதில் விதிவிலக்கானதாகும். அது ஒரு குறிப்பிட்ட மனிதனையோ, கோத்திரத்தையோ சார்ந்ததாக இல்லாமல் அல்இஸ்லாம் என்ற பதம் எந்தக் கருத்தைத் தாங்கியுள்ளதோ அதையே பெயராகவும் கொண்டுள்ளது.

## இஸ்லாத்தின் கருத்தும் அதன் கோட்பாடுகளும்

இஸ்லாம் என்பதன் அர்த்தம் ஏவக்கூடியவனின் ஏவலுக்கும், விலக்கலுக்கும் எவ்வித மறுப்புமின்றி முழுமையாகக் கட்டுப்பட்டு சரணடைந்து செயல்படுவதாகும். என (அல்குர்ஆன் அருளப்பட்ட மொழியான) அரபுமொழி அகராதியில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. எனவே இஸ்லாம் என்பது அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு எவ்வித மறுப்புமின்றி அவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகும். இதுவே அதன் உண்மை நிலையுமாகும். எனவே ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு அவன் ஏவியதை நிறைவேற்றி விலக்கியதைத் தவிர்ந்து நடக்கும் பட்சத்தில் அவன் வாழும் இவ்வுலகின் படைப்புகளுக்கு நிகராக ஒரு ஒழுங்கமைப்பில் செல்கிறான். இவ்வுலகில் இருக்கும்

அனைத்தும் அல்லாஹ்வின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு சரணடைகின்றன. இப்பிரபஞ்சத்தின் அனைத்துப் படைப்புகளும் ஒரு நிலையான நியதிக்கும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்கும் கட்டுப்படுகின்றன என்பது தெரிந்ததே. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், இரவு, பகல், பூமி, மரங்கள், மிருகங்கள் ஆகிய அனைத்தும் (அவைகளைப் படைத்த) அல்லாஹ் இட்ட வரையறைக்குள் சென்று கொண்டிருக்கின்றன. மனிதனின் உருவ அமைப்பும் அவனது உறுப்புக்கள் பொருத்தப்பட்டிருக்கும் விதமும், அவனுக்கு இன்றியமையாத நீர், நெருப்பு, உணவு, காற்று, ஒளி, உறக்கம், ஓய்வு முதலியவற்றையும் நன்றாகச் சிந்திக்குமிடத்து அவனும் ஏனைய படைப்புக்களைப்போல் ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டே வாழ்கிறான். இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் படைப்புகளும் பொதுவான ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டும் சரணடைந்துமே வாழவேண்டுமென்ற நிலை தெளிவாகவுள்ளது. இது சக்தி, வல்லமை மிக்க ஆள்பவனின் செயலாகும். ஏக இறைவனான அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே எல்லாப் படைப்புகளும் எல்லா விடயங்களும் சொந்தமாகும். எனவே இப்புவியும் அதிலுள்ளவைகளும் அதன் கீழுள்ளவைகளும் அந்த சக்தி வாய்ந்த படைப்பாளனான அல்லாஹ்வுக்கே அடிபணிகின்றன.

இவ்விதம் பார்க்குமிடத்து இவ்வுலகிலுள்ள யாவற்றினதும் மார்க்கம் இஸ்லாம் என்பது தெளிவாகின்றது. ஏனெனில் மேலே கூறியவாறு இஸ்லாம் என்பது ஏவுபவனின் ஏவலுக்கும், விலக்கலுக்கும் எவ்வித மறுப்புமின்றிக் கட்டுப்படுவதாகும். ஏவுபவன் என்று இங்கு கூறப்படுபவன் அல்லாஹ்வாகும். அவன் தனித்தவன். அவனுக்கு இணையேதுமில்லை. அவனுக்கே படைக்கும் அதிகாரமும், அமுல்படுத்தும்

அதிகாரமும் உண்டு. இவ்விடயத்தில் மனிதன் உலகில் இருக்கும் அனைத்துடனும் ஒன்றுபடுகின்றான். அல்லாஹ் மனிதனுக்கு பகுத்தறிவை வழங்கியுள்ளதால் அவன் ஏனயவற்றிலிருந்தும் வேறுபடுகிறான். எனினும் யாவற்றுக்கும் உணவளித்துக் காப்பவன் அல்லாஹ்வே. இம்மானிட சமூகத்திற்கு வேறுபட்ட காலங்களில் தூதர்களை அனுப்பி நேர்வழி எது? தீயவழி எது? என்பதையும் விளக்கியுள்ளான். இத்தூதர்கள் வரிசையில் இறுதியாக வந்தவரே முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் (ஸல்) அவர்கள். எனவே எவர் இறைவனுக்குக் கட்டுப்பட்டு நேரான பாதையைத் தேர்ந்தெடுத்து அல்லாஹ் அவருக்கு ஏவிய வணக்க வழிபாடு களை நிறைவேற்றுகின்றாரோ அவரே உண்மையான முஸ்லிமாவார். எவர் தீய (தடுக்கப்பட்ட) வழிகளைத் தேர்ந்தெடுத்து வணக்க வழிபாடுகளை விட்டு (ஹறாமான) கருமங்களைச் செய்கிறாரோ அவர் (காபிர்) இறை மறுப் பாளனாவார். இறைவனைச் சந்தித்து கூலி பெறும் நாளில் தத்தம் செயல்களுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் கூலிகளைப் பெறுவார்கள்.

எனவே எவர் ஒரு அணுவளவு நன்மை செய்தாலும் அதன் பலனைக் கண்டுகொள்வார். எவர் ஒரு அணுவளவு தீமை செய்திருந்தாலும் அதற்குரிய பலனையும் கண்டுகொள்வார். இவ்வாறு அல்லாஹ் மனிதனுக்குப் பல அருள்களை அள்ளிக் கொடுத்துள்ளான். மேலே குறிப்பிட்டவை இவற்றுள் சிறப்பிற்கு உரியவைகளாகும். இவ்வாறே நீரிலுள்ளவற்றையும், நிலத்திலுள்ளவற்றையும், இரவையும், பகலையும் வசப்படுத்திக் கொடுத்து அவனை மட்டும் வணங்குமாறும், அவனுக்கு இணை வைப்பதை விட்டும் தவிர்ந்து கொள்ளுமாறும் தடுத்துள்ளான்.

அவனை வழிபடுவதற்கென பல (அருள்களையும்) அளப் பெரிய நன்மைகளையும் கொடுத்துள்ளான்.
அவனது அருட் கொடைகளுள் சில....
1- உண்மையான இறைவன் அல்லாஹ்தான் என்றும் அவனன்றி வணக்கத்திற்கு வேறு எதையும் எடுக்கக் கூடாது என்பதற்காக இப்பிரபஞ்சத்தில் பரந்து விரிந்திருக்கும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இருந்து படிப்பினை பெறுதல்.
2- எவ்விதப் பயமோ (அச்சமோ) இன்றி நிம்மதியாக வாழ்வதற்கு இவ்வுலகின் வாழ்வை அமைத்துள்ளான். ஒரு விசுவாசியின் எல்லாச் செயல்களும் சிறந்ததாகும் என நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு விசுவாசியின் விஷயங்கள் ஆச்சரியத்திற்கு உரியதாகும். அவனுக்கு ஏற்படும் யாவும் நல்லவைகளே, அவனுக்கு மகிழ்ச்சியூட்டும் விஷயங்கள் நடைபெற்றால் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவான். அது அவனுக்கு சிறப்பாக அமைந்துவிடும். அவனுக்குத் தீங்கான விஷயங்கள் ஏற்பட்டால் அதைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வான். அதுவும் அவனுக்கு நன்மையாகவே இருக்கும். இந்நிலை ஒரு விசுவாசியைத் தவிர வேறு எவருக்குமில்லை. அவன் எதற்காக இவ்வுலகில் வாழ்கிறான் என்பது அவனுக்குத் தெரியும். மனிதவர்க்கமும், ஜின் வர்க்கமும் அல்லாஹ்வை வணங்குவதற்காகவேதான் படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் மனிதர்களிடமிருந்து கூலியையோ, உணவையோ எதிர்பார்க்கவில்லை. எனினும் சர்வ சக்தனாகிய அவனே படைப்பினங்கள் எல்லாவற்றிற்கும் உணவளிப்பவனாக இருக்கின்றான். இவ்வுலக வாழ்க்கை முடிவடைந்த பின்பு மனிதன் எங்கு செல்லவேண்டும் என்பதை அல்லாஹ் மட்டுமே அறிவான். கூலி கொடுக்கும் நாளில் அவனது இரட்சகனைச் சந்திப்பதற்காகவே மனிதன்

செல்கின்றான். அவன் எங்கிருந்து வருகிறான் என்பதும் இறைவனுக்கு நன்கு தெரியும். மனிதனைப் படைத்து அவனுக்கு உணவளிக்கும் இறைவனின் கட்டளைப்படியே வந்துள்ளான். இறைவன் அவனுக்கு வெளிப்படையான, மறைவான பல அருட் கொடைகளைக் கொடுத்துள்ளான். இவ்வுலகின் அனைத்தையும் அவனுக்காக வசப்படுத்தியும் கொடுத்துள்ளான்.

**நிச்சயமாக அல்லாஹ் விண்ணிலுள்ளவற்றையும் மண்ணிலுள்ளவற்றையும் உங்களுக்கு வசப்படுத்தியுள்ளான். என்பதையும், இன்னும் தன் அருட்கொடைகளை உங்கள் மீது புறத்திலும், அகத்திலும் நிரம்பச் செய்திருக்கின்றான் என்பதையும் நீங்கள் அறியவில்லையா? (அல்குர்ஆன் 40:79)**

**அல்லாஹ்தான் கால்நடைகளை உங்களுக்காக உருவாக்கியிருக்கின்றான். அவற்றில் சிலதின்மீது நீங்கள் சவாரி செய்கிறீர்கள். இன்னும் சிலவற்றிலிருந்து புசிக்கிறீர்கள். (அல்குர்ஆன் : 40-79)**

**அல்லாஹ் எத்தகையவன் என்றால் அவன்தான் வானங்களையும், பூமியையும் படைத்து வானத்திலிருந்து மழையையும் பொழியச்செய்து, அதைக் கொண்டு கனி வர்க்கங்களையும் ஆகாரமாக வெளிப்படுத்தி, தன் கட்டளையினால் கடலில் செல்லுமாறு கப்பலை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்து, ஆறுகளையும் வசப்படுத்தித் தந்தான். (தவறாமல்) தம் வழியில் ஒழுங்காகச் செல்லுமாறு சூரியனையும் சந்திரனையும் அவனே உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். மேலும் இரவையும் பகலையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். (அல்குர்ஆன் 14: 32, 33 )**

**நபியே நீர் பார்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் இப்பூமியில் உள்ளவற்றை உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்றான். (அல்குர்ஆன் 22 : 65)**

3. ஒரு முஸ்லிம் தனது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் போதே இவ்வுலகம் ஒரு நிரந்தரமான இடமல்ல என்பதை அவன் அறிகிறான். மாறாக இது நிரந்நதரமான (மறுமை) வாழ்வுக்குச் செல்லும் வழியாகும். மேலும் எல்லா அருட்கொடைகளையும் அள்ளிக் கொடுக்கும் பேரருட் கொடையாளனான அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முந்திக் கொண்டு நன்மைகளை அதிகமாகச் செய்யும் சந்தர்ப்பமுமாகும். எனவேதான் ஒரு முஸ்லிம் தனது வாழ்க்கைக்குத் தேவையான சில அம்சங்களை பெறுகின்றபோது அதைக்கொண்டு திருப்தியடைந்து அதை ஏற்றுக்கொள்வது ஏனெனில் இவ்வுலகம் குறுகிய கால இன்பம் என்பதை அவன் நன்கு அறிவான்.

4. ஒரு முஸ்லிம் மறுமையில் தனது இரட்சகனின் பொருத்தத்தைப் பெற்று வெற்றிபெறுகின்றான். அல்லாஹ்வின் இப்பொருத்தத்தின் மூலம், நரகை விட்டும் பாதுகாப்புப் பெற்று சுவனம் நுழைகின்றான்.

**ஆகவே (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பை விட்டும் தூரமாக்கப்பட்டு, சுவனபதியில் நுழைவிக்கப்படுகிறாரோ அவர், நிச்சயமாக ஜெயம் பெற்றுவிட்டார். மேலும் இவ்வுகலக வாழ்க்கை ஏமாற்றி வைக்கும் (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை. (அல் குர்ஆன்.3:185)**

இஸ்லாத்தைப் பற்றிய இச்சிறு குறிப்பின் மூலம் அதை விபரமாக அறிந்து கொள்ளும் எண்ணம் கொண்டிருப்பீர். எனவே இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மேற் குறிப்பிட்டபடி

இதுவன்றி வேறு எந்த மார்க்கத்தையும் யாரிடமிருந்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை.

**நிட்டமாக அல்லாஹ்விடம் (ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே) மார்க்கம் இஸ்லாமாகும். (அல்குர்ஆன் :3.19)**

**இன்னும் இஸ்லாமல்லாத (வேறு) மார்கத்தை எவரேனும் விரும்பினால் ஒருபோதும் அது அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் இருப்பார். (அல் குர்ஆன்: 3.85)**

எனவே இந்த மார்க்கத்தை அறிந்து கொள்வதற்குரிய வழிமுறை என்ன?

அல்லாஹ்வின் கட்டளைகளையும், அவனது ஷரீஅத்தையும் அறிந்து கொள்ளும் வழிமுறைகள் வருமாறு:

ஒரு மனிதனுக்கு எவ்வளவு புத்திக் கூர்மையும், விவேகத் தன்மையும் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் வெறுமனே புத்திக் கூர்மையாலும், விவேகத்தாலும் அல்லாஹ்வின் சட்ட திட்டங்ளையோ, அவனது ஏவல், விலக்கல்களையோ அறிந்து கொள்ளமுடியாது. தன்னைப் போன்ற ஒரு படைப்பான இன்னொரு மனிதனின் உள்ளத்தில் மறைந்துள்ளதை (அவன் கூறாது அல்லது செய்து காட்டாது) அறிந்துகொள்ள முடியாத இவனுக்கு இப்பிரபஞ்சத்தில் அனைத்தையும் படைத்தவனாகிய அல்லாஹ்வின் நாட்டத்தை எப்படி அறிந்துகொள்ள முடியும்? இதன் அடிப்படையாவது படைப்பினங்களுக்கு மறைவான விஷயங்களை அறிந்துகொள்ள முடியாது. ஆயினும் படைத்தவனான அல்லாஹ் படைப்புகளின் உள்ளங்களில் உள்ளவற்றையும் அவற்றின் நிகழ்கால எதிர் காலங்களில் சாத்தியமானவற்றையும் அறிவான். எனவே அல்லாஹ்வின் நாட்டங்களையும், சட்டங்களையும் அறிவதானால் அவன் உலக மக்களின்பால் தூது (வஹீ) அனுப்பிய நபிமார்கள் மூலம்

அறிந்து கொள்ளமுடியும், தவிர வேறு முறைகள் கிடையாது. அல்லாஹ்வுக்கு அவனது அடியார்கள் மீதுள்ள அளவற்ற அன்பினால் அவர்களது குறுகிய சிந்தனைகளாலும், மனோ இச்சைகளாலும் அவர்களைத் தடுமாற விடாது அவர்களின்பால் தூதர்களையும், வேதங்களையும் இறக்கியுள்ளான். அத்தூதர்கள் கொண்டுவந்த வேதங்களை மக்களிடம் ஓதிக் காண்பித்து, அல்லாஹுவின் நாட்டத்தை விளக்கி அதன் மூலம் மனிதர்கள் பெறும் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை விளக்கமாகவும் கூறியுள்ளனர். தூதர்களுள் இறுதியானவர் ஹாஷிமீ குலத்தைச் சேர்ந்த முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் (ஸல்) ஆவார்கள்.

**தூதர்களை அறிந்து கொள்ளல்:**

அல்லாஹுவின் சட்ட திட்டங்களையும், அவனது ஏவல்களையும் மனிதர்களுக்கு எத்திவைக்க வந்தவர்களே தூதர்கள் என்பதை அறிந்து கொண்டீர்கள். அந்தத் தூதர்களை அறிந்து கொள்வதற்கான வழிகளும் அவர்கள் உண்மையானவர்கள் என்பதற்குரிய ஆதாரங்களும் என்ன?

**தூதர்கள் உண்மையானவர்கள் என்பதற்கான ஆதாரங்கள்:**

நபித்துவத்தின் ஆதாரங்களையும், தூதர்கள் உண்மை யானவர்கள் என்பதற்கான ஆதாரங்களையும் அறிந்திருப்பது எமது கடமையாகும்.

1. தூதர்கள் அவர்களுக்குச் சார்பாக (சுய நலன் கருதி) எதையும் தேடாது மனிதர்களின் பொது நலனுக்காகவே அவர்கள் பாடுபட்டு அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விஷயங்களை எச்சரித்துமுள்ளார்கள் என்பதைக் காண்பீர்கள்.

2. மறைவான அம்சங்களைப்பற்றி அவர்கள் பேசுவதும், அவற்றை நம்பவேண்டுமென்று மனிதர்களுக்கு அழைப்பு

விடுக்கும் விதமும் வேறு எவரும் தமது சிந்தனைத் திறமையாலும், விவேகத் தன்மையாலும் (பெற்றிட) முடியாது. மேலும் அவர்கள் அறிவித்த விஷயங்களை நடைமுறை நிகழ்வுகள் உண்மைப்படுத்துகின்றன.

3. ஒவ்வொரு தூதரும் முன்வைத்த அத்தாட்சிகளை அவர்களின் சமூகத்தவர்களில் எவரும் மறுப்பதற்கோ அல்லது அதுபோல் ஒன்றைக் கொண்டு வருவதற்கோ முடியாது போய்விட்டது. உதாரணமாக நபி நூஹ் (அலை) அவர்கள் தனக்கு எதிர்ப்புக் காட்டிய தனது கூட்டத்தினரை நோக்கி முடிந்தால் என்னை அழித்துவிடுங்கள் என்று சவால்விட்டார்கள். ஆனால் அச்சவாலை எதிர்கொள்ள அவர்களால் முடியாது போய்விட்டது. அவர்கள் தம்மை எதிர்த்தவர்களின் கடும் கோபத்திற்கு ஆளாகியும் அவர்கள் மத்தியிலேதான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவ்வாறுதான் நபி இப்றாஹீம் (அலை), நபி ஹூத் (அலை) ஆகியோரது அனுபவங்களும் காணப்பட்டன. அதுபோல் நபி மூசா (அலை) அவர்களுக்கு கைத்தடி ஒன்றைக் கொடுத்து அதைப் பாம்பாக மாற்றிக் காட்டினான். நபி ஈசா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் குஷ்டரோகம், பிறவிக் குருடு ஆகிய நோய்களைக் குணப் படுத்தல், மரணித்தவர்களை உயிர்பித்தல் முதலிய அற்புதங்களையும் வழங்கினான். அவ்வாறே மனிதர்கள் எவரிடமும் கல்வி கற்றிராத, எழுத வாசிக்கத் தெரியாத, இளம் பராயத்திலே தமது பெற்றோர்களை இழந்து அனாதையாக வாழ்ந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இத்திருமறைக் குர்ஆனையும் வழங்கினான். மக்கத்துக் காபிர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இத்திருமறையைப் போன்ற ஒன்றையோ அல்லது இதன் பத்து சூறாக்களைப் போலவோ கொண்டுவர முடியவில்லை. இறுதியாக ஒரு சூறாவையாவது கொண்டு

வாருங்கள் என்று கூறியும் அதை அவர்களால் கொண்டுவர முடியவில்லை. இனிமேலும் அவர்களால் அது முடியாது.

**மனிதர்களும் ஜின்களும் ஒன்றிணைந்து, அவர்களில் சிலர் மற்றவருக்கு அனுசரணையாகவுமிருந்து இத்திருமறையைப் போன்ற ஒன்றை உருவாக்க முயன்றாலும் அவர்களால் இதுபோல் ஒன்றைக் கொண்டுவர முடியாது. என்று நபியே நீர் கூறும். (அல்குர்ஆன்: அல் இஸ்றா.88)**

அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்களிலிருந்தே தூதர்களை அனுப்பிவைத்தான். அச்சமூகங்களுக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் அற்புதங்களையும் கொடுத்தான். வித்தியாசமான அற்புதங்கள் அச்சமூகங்களுக்கு மட்டும் பொருத்தமானதாகக் காணப்பட்டன. அவைகள் நிரந்தரமானதாக இருக்கவில்லை. அந்தச் சமூகங்களுடன் அச்செய்திகளும் முற்றுப்பெற்றுவிட்டன. ஆயினும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது தூதுச் செய்தி இறுதியானதாகும். எனவேதான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மனித இனமிருக்கும் காலமெல்லாம் நிலையாக இருக்கத்தக்க அற்புதத்தை அல்லாஹ் கொடுத்துள்ளான். அவர்களுக்கு முன் வந்த தூதர்களுக்கு (பெரும்பாலும்) புலன்களால் அறிந்து கண்ணால் பார்க்க் கூடிய அற்புதங்களையே கொடுத்திருந்தான். ஆனால் அற்புதமிக்க அல்குர்ஆன் அறிவு, புத்தி சம்மந்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. கால வளர்ச்சிக்கேற்ப ஈடுகொடுக்கக் கூடியதாகவும் இதுவுள்ளது.

அல்லாஹு"வின் மார்க்கமான இஸ்லாத்தை அறிந்து கொள்ளும் வழிமுறையை அறிந்தீர்கள். எனவே அல்லாஹு" வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கமும், தனது நல்லடி யார்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாரக்கமுமான இஸ் லாத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள முயல்வோம்.

மேலே சொல்லப்பட்டது போன்று இஸ்லாம் என்பது அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு அடிபணிவதாகும். அல்லாஹ்வுக்கு இணைவைக்காது அவன் ஒருவனையே வணங்குவது மனிதன் செய்யும் வெளிப்படையான வழிபாடாகும். அவ்வாறே தூதர்கள் கொண்டுவந்த மார்க்கத்திற்கு இசைவாகவும் நடக்கவேண்டும். எந்த வணக்கமும் அல்லாஹ்வுக்காகவும் அவனது இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டுவந்த (ஷரீஅத்)திற்கு ஏற்பவும் அமைந்து விடுமாயின் அதுவே இஸ்லாமாகும். இதற்கு மாற்றமான வணக்கங்கள் யாவும் அல்லாஹுவால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவைகள் அல்லாஹுவின் சட்டங்களுக்கு மாற்றமானவைகளாகும். இவ்விதமான உண்மையான வணக்க வழிபாடுகள் (உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்) மனப்பாண்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துவிடும். இதன் மூலமே ஒரு அடியான் அவனது இரட்சகன், படைப்பாளன், அருள் பாளிப்பவனான அல்லாஹுவின் திருப்தியைப் பெறுகின்றான். இதுவே மறுமை நாளில் அல்லாஹுவின் தண்டனையிலிருந்து அவனைப் பாதுகாக்கின்றது.

இந்த இஸ்லாம் ஐந்து அடிப்படைகளில் அமைக்கப்பட்டுள்ளது.

**1- அல்லாஹுவையன்றி வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி பகர்தல்.**

உண்மையான இறைவன் அல்லாஹ் ஒருவனென்றும் அவனல்லாத ஏனய கடவுள்கள் சத்தியமற்றவை என்றும், அவை எவ்வித நன்மையோ தீமையோ செய்யமுடியாதவை என்றும், அவைகள் வணங்குவதற்கு அறவே தகுதியற்றவை என்றும் பகிரங்கப்படுத்தி ஏற்றுக் கொள்வதே சாட்சியத்தின் உண்மை

நிலையாகும். இவ்வாறே இப்பிரபஞ்சத்தின் அனைத்து நடவடிக்கைகள், உலக வாழ்க்கை அனைத்தையும் திட்டமிட்டு செயல்படுத்தும் அதிகாரமுள்ளவன் அல்லாஹ் மாத்திரமே. அவனது ஷரீஅத்திற்கும், ஏவல்களுக்கும் ஏற்பவேயன்றி வேறுவிதத்தில் மனிதர்களின் பால் அதிகாரம் செலுத்த யாருக்கும் முடியாது.

**அல்லாஹ் ஒருவனுக்கேயன்றி (வேறெவருக்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டுள்ளான். (சூறா யூசுப் 40)**

மனிதர்கள் நீதம் கேட்டுச் செல்வதற்குத் தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை.

**அதிகாரங்கள் அனைத்தும் அல்லாஹ் ஒருவனிடமேயன்றி வேறில்லை. சத்தியத்தையே அவன் கூறுகின்றான். தீர்ப்பு வழங்குவோரில் அவனே மிக்க மேலானவனாக இருக் கின்றான். (அல் குர்ஆன் : சூறா அல் அன்ஆம்:57)**

**அல்லாஹ்வின் தீர்ப்பன்றி ஏனயவைகள் அசத்தியமான அறியாமையின் தீர்ப்புக்களாகவே இருக்கும். அதில் வழிகேடும், அநியாயமும், அறியாமையுமே நிறைந்திருக்கும். அஞ்ஞான காலத்துத் தீர்ப்பையா அவர்கள் விரும்புகிறார்கள்? உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிட தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்? (அல்மாயிதா: 50)**

எல்லா வணக்கவழிபாடுகளும் அவனுக்கே நிறைவேற்றப்படுவது அவசியமாகும். அதேபோல் அவனல்லாத வேறு எவருக்கும் தலைசாய்த்து குனிந்து மரியாதை செய்வது, வணக்கம் புரிவது, பிரார்த்திப்பது, தேவைகளை நிறைவேற்ற வேண்டுவது ஆகியன தடுக்கப்பட்ட செயல்களாகும். அல்லாஹ் ஒருவனைத் தவிர

வேறு எவராலும் படைப்பினங்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாது.

முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று ஏற்றுக் கொள்வதின் உண்மைநிலை யாதெனில் அவர் அல்லாஹு"வின் தூதர் என்று (அங்கீகரித்து) ஏற்றுக்கொண்டு அவர் உண்மை, நம்பிக்கை, போன்றவற்றிற்கு உரித்தானவர் என்றும், பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர் என்றும் நம்பிக்கைகொள்ள வேண்டும். அல்லாஹ்வின் புறத்தில் இருந்து அவர் அறிவிப்பதாகக் கூறுகின்றவற்றையும், சென்ற காலங்களில் நடைபெற்ற செய்திகளை அவர் அறிவிப்பதையும், எதிர்காலத்தில் நடக்கப்போகின்ற (மறைவான) அம்சங்கள் பற்றி முன்னறிவிப்புச் செய்வதையும் உண்மை என ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் அறிவித்துள்ள அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து பெற்ற வஹீயாகும்.

**அது அவருக்கு வஹீமூலம் அறிவிக்கப்பட்டதே அன்றி வேறில்லை. மிக்க வல்லமையுடைய (மலக்குகளின் தலைவரான ஜிப்ரீல்) அவருக்குக் கற்றுக் கொடுத்தார். (அல் குர்ஆன். அன் நஜ்ம் : 4 . 5)**

மேலும் அவர் ஏவுகின்ற விஷயங்களை எடுத்து நடப்பதும், விலக்கிய விஷயங்களை தவிர்ந்து நடப்பதும் அவசியமாகும். ஏனெனில் தூதருக்குக் கட்டுப்படுவது இறைவனுக்குக் கட்டுப்படுவதாகும். அல்லாஹு"வின் கட்டளைகளையும் சட்ட திட்டங்களையும் எத்திவைப்பவர் அவரேயாவார். அவருக்கு மாற்றம் செய்வது அவரைத் தூதராக அனுப்பிய அல்லாஹு"வுக்கு மாறு செய்வதாகும். இவ்வாறே அவரை வழிபடும்போது இறைவனை வழிபடுவதாகக் கணிக்கப்படும்.

## 2 - தொழுகையை நிலை நாட்டல்.

இஸ்லாத்தின் அடிப்படைகளில் இரண்டாம் இடத்தைப் பெறுவது தொழுகையாகும். இது உடம்பைச் சுத்தம் செய்வதின் மூலம் ஆரம்பித்து உளத்தூய்மையுடன் முடிவு பெறுகின்றது. ஒரு நாளைக்கு ஐந்துமுறை இத்தொழுகையைத் தொழவேண்டும். தனது இரட்சகனின் நினைவு மறக்கும் போதெல்லாம் தொழுகையைப் புதுப்பித்துத் திரும்பத் திரும்ப ஒவ்வொரு நாளும் தொழும் பட்சத்தில் ஒரு மனிதனின் உள்ளம் உறுதி பெற்று சீரடைகின்றது. ஒரு மனிதன் அவனது நாளில் முதல் முதலாகச் செய்யவேண்டியது தொழுகையாகும். ஒரு நாளில் முதல் தொழுகை (வானம்) வெளுக்கும் விடியற் காலையில் ஆரம்பமாகி சூரியன் உதயமாவதுடன் முடிவடைகின்றது. இதன்பின்னர் குறிப்பிட்ட இடைவேளைக்குப்பின் பகல் பொழுதில் இறைவனைப்பற்றி மறதி ஏற்படும் நேரத்தில் (ளுஹர்) தொழுகை நேரம் வருகிறது. இது அம்மனிதனுக்கு உளத் தூய்மையைக் கொடுத்து அவனது இரட்சகனுடன் அவனைத் தொடர்புபடுத்தி வைக்கின்றது. அவனுக்கு அருளையும் உதவியையும் அவனது வாழ்வு அனைத்திலும் உறுதியையும் கொடுக்க வேண்டுமென்று இறைவனிடத்தில் பிரார்திக்க வைக்கிறது. அவன் மறுமைக்காகப் பாவ மன்னிப்புக் கேட்கும் பொழுது செய்த பாவங்களும், தவறுகளும் மன்னிக்கப்படுகின்றன. இவ்வாறுதான் அவன் அவனுடைய இரட்சகனைச் சந்திக்கும்வரை ஒவ்வொரு தொழுகைக்கும் அடுத்த தொழுகைவரை கூலி கிடைத்துக்கொண்டே இருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் உங்களில் ஒருவரின் வீட்டுக்கு முன்னால் ஒரு ஆறு ஓடுகிறது. அதில் அவர் ஒரு நாளைக்கு ஐவேளை குளிக்கிறார் எனில் அவருடைய உடலில் அழுக்கு ஏதாவது இருக்குமா? என்று கேட்டார்கள். அதற்கு

அவர்களின் தோழர்கள் இருக்காது என்பதாகப் பதிலளித்தார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறுதான் இவேளைத் தொழுகைகளின் மூலம் அல்லாஹ் ஒரு மனிதனது பாவங்களைப் போக்குகிறான் என்று கூறினார்கள்.

முஸ்லிம்கள் பள்ளி வாயில்களில் இத்தொழுகைகளை நிறைவேற்றுவதால் அவர்களுக்கிடையில் ஒரு இணைப்பு உருவாகிறது. இந்த இணைப்பான சூழலில் அவர்களிடம் சகோதரத்துவமும், இரக்க மனப்பான்மையும், இணக்கமும் உருவாகின்றது. மேலும் இத்தொழுகை மானக் கேடான பாவங்களிலிருந்து மனிதர்களைத் தடுக்கின்றது. அடியானின் அனைத்துச் செயல்களுக்கும் உதவியாகவும் இது அமைந்து விடுகிறது.

**பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்.** (அல் குர்ஆன். 2 : 45)

## 3 - ஸக்காத்"

இது பொருளாதாரம் சம்பந்தமான வணக்கமாகும். இது பணம்படைத்தவர்களின் பணத்தில் வருடத்திற்கு ஒரு தடவை கணக்குப் பார்த்துக் கொடுப்பது கடமையாகும் பணம், பொருள், ஆகியவற்றில் குறிப்பிட்ட அளவும், நிறையும் இருக்கின்றது. இது பணக்காரர்கள், வசதி படைத்தவர்களிடமிருந்து பெற்று ஏழைகளுக்குக் கொடுக்கப்படுவதால் ஏழைகளின் தேவைகள் நிறைவேற் றப்படுகிறது. உள்ளங்கள் விருப்புக் கொண்டிருக்கும் பணத்திற்கு அடிமைப்பட்டிருப்பதை விட்டு விடுதலை பெறச் செய்து தனவந்தர்களைத் தூய்மைப்படுத்துகிறது.

**இன்னும் பொருளை அளவு கடந்த பிரியத்துடன் நேசிக்கிறீர்கள்.** (சூறா அல்பஜ்ர் 20)

மேலும் இந்த ஸகாத் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஈட்டிக்கொடுக்கின்றது. ஸதகா கொடுப்பதன் மூலம் பணம் குறைவதில்லை. மாறாக அதிகரிக்கின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறு ஸகாத் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணியாக அமைந்துள்ளது. உள்ளங்கை உலோபித்தனம், சுயநலம் ஆகியவற்றிலிருந்து தூய்மை பெறவும் காரணமாகிறது. இதன் மூலம் ஏளைகளுக்கு பணக்காரர்மீதும், பணக்காரர்களுக்கு ஏளைகள்மீதும் விருப்புணர்வு ஏற்பட்டு சமுதாய ஒற்றுமைக்கு வழி கோலுகிறது. இவை யாவற்றிற்கும் மேலாக அல்லாஹ்வுக்குச் செய்யும் (இபாதத் என்னும்) வணக்கமென்ற வகையில் அவனது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு அவனது திருப்தியைப் பெறும் காரணியாகவுமுள்ளது.

<u>4 . றமழான் மாத நோன்பு:</u>

இந்த நோன்பின் மூலம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படும் நிலை பூரணத்துவம் பெறுவதுடன் அல்லாஹ் ஒருவனையே வழிபடும் உணர்வுகளும் அவனது நாட்டத்திற்காக மாத்திரம் அடிபணியும் நிலையும் ஏற்படுகின்றது. இது இறைவனுடன் நெருக்கத்தை ஏற்படுத்தும் வணக்கமாகும். மேலும் இறைவனைப்பற்றிய நினைவை அதிகரிக்கச் செய்வதுடன் ஒழுக்கநெறி, மனக் கட்டுப்பாடு, இதயசுத்தி, (இரத்த) ஓட்டங்களையும் சீர்செய்கிறது. இது இறையச்சத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியுமாகும்.

**உங்களுக்கு முன்னிருந்தவர்கள்மீது நோன்பை விதியாக்ககப்பட்டது போல் உங்கள்மீதும் (அது) விதியாக்கப்பட்டுள்ளது. (அதன்மூலம்) நீங்கள் இறையச்சம் உடையோராகலாம்.** (2 -183)

முன்சென்ற சமூகங்களுக்கு நோன்பு கடமையாக்கப் பட்டிருந்தது. அது அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடியதாகவும், புனிதமாக்கக் கூடியதாகவும், வாழ்க்கைச் சுமைகள், கஸ்டங்கள் முதலியவற்றிலிருந்து உதவியை வேண்டக் கூடியதாகவும், பொறுமையை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. (அல்லாஹ்விடம்) தனது எதிர்பார்ப்புகளைப் பெற்றுக்கொள்ள ஒரே ஒரு வழி பொறுமை. **"நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்.**

5 - ஹஜ் யாத்திரை

இதுவரை கூறப்பட்ட இஸ்லாத்தின் அடிப்படைகள் மூலமாக என்னென்ன இலட்சியங்கள், எதிர்பார்க்கப்பட்டதோ அவை அனைத்தும் இந்த அடிப்படையில் கூட்டுச் சேர்கின்றது. நோன்பு எவ்வாறு ஆசைகளைக் கட்டுப்படுத்தி உண்ணல், பருகல் முதலியவற்றை விடுவதனால் உள்ளத்திற்குப் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகியவற்றிற்குப் பயிற்சியளிக்கிறதோ அவ்வாறே ஹஜ்ஜுக் கடமை ஆசைகளை அடக்கி பிறந்த ஊரையும் குடும்பத்தையும் விட்டுப் பிரிந்து பிரயாணக் கஷ்டங்களை சகிப்பதன் மூலம் பொறுமையின் பால் பயிற்சி அளிக்கிறது. இதில் பணச் செலவுகள் ஏற்படுவதால் ஸகாத்துடன் ஒன்றுபடுகிறது. இவ்வாறே இது தொழுகையுடன் கூட்டுச் சேர்வதற்கும் ஏராளமான உடல் சார்ந்த செயல்கள் அதில் இருக்கின்றது. உதாரணம்: தவாப் செய்தல், திக்றுசெய்தல், தல்பிய்யா ஓதல், சபா மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஒடுதல், ஹஜ்ஜின் ஒவ்வொரு இடங்குளுக்கும் இடம்பெயர்ந்து செல்லுதல் இன்னும் பல கிரியைகளால் இது உடல், உள்ளம், பணம் சார்ந்த ஒரு வணக்கமாகின்றது. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் முஸ்லிம்கள் ஒன்று சேரும் நிலை

தொழுகையுடன் இதை இணைக்கின்றது. இதுவன்றி அரபாத் என்னும் இடத்தில் (துல் ஹஜ் 9)ல் முஸ்லிம்கள் அனைவரும் அவர்களின் ஊர்களும், நாடுகளும், பாஷைகளும் வேறுபட்ட போதிலும் ஒரே உடை தரித்து ஒன்று சேர்கின்றனர். பொதுவாகப் பார்க்குமிடத்து இந்த ஹஜ்ஜுக் கடமை ஒரு வருடாந்த மாநாடாகும். இதில் நிறம், மொழி, தேச வேறுபாடுகள் இன்றி எல்லா முஸ்லிம்களும் ஒன்று சேர்கின்றனர். இம்மாநாட்டில் அவர்கள் தமது நிலையை மீளாய்வு செய்து கொள் கின்றனர். தூதர் (ஸல்) அவர்கள் அரபாவிலும் மினாவிலும் ஒன்று சேர்ந்த மக்களுக்கு ஆற்றிய பேருரையில் அல்லாஹ்வின் கட்டளைகளை அவர்கள் முன்னிலையில் எத்தி வைத்ததற்கு அல்லாஹ்விடம் சாட்சி பெற்றார்கள். இவ்விஷயத்தில் அவர்களுக்கு இறைத் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. இது இப்றாஹீம் (அலை) அவர்கள் கஃபாவைக் கட்டி முடித்தபின் அங்கு வந்து ஹஜ்ஜு செய்யுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்குமாறு கூற அவர்கள் "அல்லாஹ் உங்கள்மீது ஹஜ்ஜைக் கடமையாக்கி இருக்கின்றான். நீங்கள் வந்து ஹஜ்ஜு செய்யுங்கள் என்று விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டதுடன் அல்லாஹ்வின் கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டதாகவும் அமைகின்றது.

**ஹஜ்ஜைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும், வெகு தூரத்திலிருந்து மெல்லிய ஒட்டகைகளின் மீதும் உம்மிடம் வருவார்கள். எனக் கூறினோம். (அல் குர்ஆன்-22 : 27)**

இத்துடன் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தின் கடமைகளைப் பூர்த்தி செய்கின்றான். அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மது (ஸல்) அவர்களை நபியாகவும் தூதராகவும் ஏற்றுக்கொண்ட நிலையில் (மேலே கூறப்பட்ட

ஐந்து) கடமைகளையும் நிறைவேற்றிய நிலையில் ஒருவன் மரணித்தால் அல்லாஹ்வின் உதவியால் அவனது திருப்பொருத்தத்தைப் பெற்று சுவர்க்கம் நுழைவான். அத்துடன் ஒருவன் தனது உள்ளத்தில் எவ்விதமான நம்பிக்கையும் இல்லாது இவற்றைச் செய்தால் அது எவ்விதப் பயனும் அளிக்காது. அது அவனை அல்லாஹ்வின் தண்டனையை விட்டும் பாதுகாக்காது. அவன் வெளிப்படையாக தன்னை ஒரு முஸ்லிம் என்று கூறிக்கொண்டாலும் பலன் ஏதும் கிடையாது. எனவே உள்ளத்தில் நம்பிக்கை கொள்வது அவசியமாகும். அந்த நம்பிக்கைக்குரிய அடிப்படைகள் ஆறுவகைப்படும்.

**ஈமான் என்னும் (நம்பிக்கை) சார்ந்த அடிப்டைகள்:-**

மேலே இஸ்லாத்தின் கடமைகளைப் பார்த்த பொழுது அதில் முதலாவது அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதி மொழி அளிக்க வேண்டுமென அறிந்தோம். இதில் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹுவின் தூதர் என்னும் உறுதி மொழியின் உள்ளடக்கம் யாதெனில், அவர் மனித சமூகம் அனைத்திற்கும் அல்லாஹுவால் அனுப்பப்பட்ட தூதர் என்று நம்புவதாகும். மேலும் அவர் போதித்தவை அனைத்தையும் உண்மைப்படுத்தி, அவர் ஏவியவற்றை ஏற்று நடந்து, அவர் தடுத்தவற்றைத் தவிர்ந்து நடப்பதுமாகும். அல்லாஹுவையும், அவனது வானவர்களான மலக்குகளையும், அவன் அருளிய வேதங்களையும், அவனது தூதர்களையும், மறுமை நாளையும், நன்மை, தீமை யாவும் அல்லாஹுவின் நாட்டப்படியே நடைபெறுகிறது என்றும் நம்பிக்கை கொள்வது றசூல் (ஸல்) அவர்கள் ஏவியதைச் சார்ந்ததாகும். இனி அந்த ஈமானின் கடமைகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

**1. அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்தல்:-**

அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்தல் என்பதன் உள்ளடக்கம் யாதெனில் உலகில் இருக்கும் அனைத்தையும்விட அவன் தனித்தவன் என்றும், அவனுக்கு வாரிசுகள் கிடையாது என்றும், அவனிலிருந்து ஏதும் பிரியவுமில்லை என உறுதியாக நம்புவதாகும்.

**அவன் எவரையும் பெறவுமில்லை, அவனை (எவரும்) பெறவுமில்லை (அல்குர்ஆன் சூறா அல்இக்லாஸ்: 3)**

அவன் மனைவி, பிள்ளைகளை விட்டும் தூய்மையானவன். அவன் பூரணத்துவமான பண்புகளை உடையவன்.

**அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன். என்றென்றும் நிலைத்திருப்பவன். அவனைத் துயிலோ, உறக்கமோ பீடிக்காது. வானங்கள் பூமியிலுள்ளவைகள் அவனுக்கே உரியன. அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (அல் குர்ஆன்- சூறா அல்பகறா: 255)**

அவன் ஜீவித்திருப்பவன். அவனுக்கு முடிவில்லை என்றும், அவன் எப்பொழுதும் விழிப்புடன் (தூக்கமோ மறதியோ இன்றி) இருக்கிறான் என்றும் நம்பிக்கை கொள்வது அவசியமாகும். மேலும் அவன்தான் அனைத்திற்கும் அரசன். அவன் அனுமதித்தவர்களைத் தவிர அவனிடம் பரிந்து பேசுவது பலனளிக்காது. அவன் ஏகன். அவனது இறைமையிலோ, அவனது வணக்கத்திற்குரிய தன்மையிலோ, அவனது குணங்கள், பெயர்கள் ஆகியவற்றிலோ நிகர் எவருமில்லை. அவனுடைய படைப்புகளுக்கும் அவனுக்குமிடையில் தரகர்களும் கிடையாது. அவனிடத்திலேதான் படைப்பினங்களுக்குரிய உணவுகள் இருக்கின்றன. அவர்களின் வாழ்வு, மரணம், அவர்களின் நல்லவைகள், தீயவைகள் அனைத்திற்கும் அவன்தான் பொறுப்பாளன். அவர்களின்

பிரார்த்தனைகளையும், இக்கட்டான சூழலில் இருப்பவர்களின் அழைப்பையும் செவிமடுத்து நிறைவேற்றுகிறான். எல்லா சிருஸ்டிகளும் அவன் பால் தேவை உள்ளவர்களாகவும் அவன் தேவையற்றவனாகவும் உள்ளான். இவ்விதமான நம்பிக்கை ஒரு மனிதனை அல்லாஹுவையன்றி வேறு எவரையும் எதிர்பார்காமலும், அவனையன்றி வேறு எவரையும் பயப்படாமலும், சிபாரிசுகளும் தரகர்களுமின்றி அவனையன்றி வேறு எவர்களிடமும் கேட்காமலும் இருக்கவைக்கின்றது. அல்லாஹுவை அன்றி படைப்பினங்கள் அனைத்தும் யாருக்கும் எவ்வித நன்மையோ, தீமையோ ஏற்படுத்த முடியாது.

அவ்லியாக்கள் என்று கூறப்படுபவர்கள் அல்லாஹ்விடத்தில் பரிந்து பேசக் கூடியவர்கள் என்பதாக மனிதர்கள் கருதி அவர்களது மண்ணறைகளுக்குச் சென்று அல்லாஹ்விடம் தமக்காக சிபாரிசு செய்யுமாறு வேண்டுவதும், அவர்களிடத்தில் நன்மைகள், தேவைகள் முதலியவற்றை வேண்டுவதும், வழிகேடாகும். சகல சக்தியும், அறிவும் என்றும் நிலைத்திருக்கும் நித்திய ஜீவனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும்.

## 2. மலக்குகளை (வானவர்களை) ஈமான் கொள்ளுதல்:-

மலக்குகளை விசுவாசம் (ஈமான்) கொள்வது மறைவான அம்சங்களை நம்புவதைச் சார்ந்ததாகும். அதை அல்லாஹ் அவனது தூதருக்கு அறிவித்தான். அவர்கள் (அல்லாஹுவின்) சங்கைமிகு அடியார்கள் அல்லாஹ் ஏவியவை எதிலும் அவர்கள் மாறு செய்யமாட்டார்கள். ஏவப்பட்ட படியே செய்து வருவார்கள். அவனை வணங்கு வதற்காகவே மலக்குகளைப் படைத்தான். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியபடி அவர்கள் சில செயல்களைச் செய்து வருகின்றார்கள். மலக்குகள் அல்லாஹ்விடம் பரிந்து பேசுகின்றனர் என்றும், அவர்கள்

அல்லாஹ்வின் பெண்பிள்ளைகள் என்றும், (எவ்வித அறிவுமின்றி) சிலர் கூறுகின்ற கூற்றை மறுப்பது அவசியமாகும். இவ்விஷயத்தில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். மலக்குகள் இருக்கின்றனர் என்பதை நம்புவது போல் அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்களைப் பற்றி கூறியுள்ளவற்றை நம்புவதும் அவசியமாகும். ஜிப்ரீல் (அலை) அவர்கள், அல்லாஹ் மக்களின்பால் அனுப்பிவைத்த தூதர்களுக்கு இறைவாக்கு (வஹியை) எடுத்து வந்தார்கள் என்பதும் (முன் சொன்னவற்றைச்) சார்ந்ததாகும். இவ்வாறே மனிதர்களின் செயல்களைப் பதியக்கூடிய மலக்குகளும் உள்ளனர். இவர்கள் (எழுதிப்) பாதுகாத்து வைத்திருந்த செயலேடுகள் மறுமையில் மனிதனின் முன்னால் எடுத்துக் காட்டப்படும். அவ்வேளை மனிதன் அதை மறுக்க முடியாத நிலையில் இருப்பான். அவ்வாறு மறுத்தாலும் அவனுடைய உறுப்பக்கள் அவனுக்கு எதிராக சாட்சி கூறும்.

**3. அல்லாஹ்விடமிருந்து அவனது தூதர்களுக்கு இறக்கப்பட்ட வேதங்களை நம்புதல்:-**

அல்லாஹ் அவனது தூதர்களுக்கு அனுப்பிய வேதங்களை நம்புவது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும். அவற்றை உண்மைப்படுத்துவதும், அவை இறைவனிடமிருந்து வந்தவை என்று நம்புவதும் அவசியமாகும். வேதங்களை நம்புவது இருவகைப்படும். ஒன்று ஈமான் முஜ்மல் எனும் பொதுப்படையானது. இரண்டாவது ஈமான் முபஸ்ஸல் என்னும் குறிப்பான நம்பிக்கையாகும்.

"அல் முஜ்மல்" என்பது அல்லாஹ்வின் தூதர்கள் ஒவ்வொருவரையும், வேதங்களின் பெயர்களையும் நாம் அறிந்தோ அறியாமலோ பொதுவாக ஏற்றுக் கொள்ளல்.

"அல் முபஸ்ஸல்" என்பது அல்லாஹ் பெயர்கள் குறிப்பிட்டுள்ள வேதங்களை நம்புவதாகும். அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேதங்கள் நான்கு. நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்குக் வழங்கப்பட்ட கட்டளைகளுடன் ஐந்தாகும் அவையாவன:-

1 - முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட எமது கையிலிருக்கும் அல்குர்ஆன்.

2 - மூஸா (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்ட தவ்றாத் வேதம்.

3 - ஈஸா (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்ட இன்ஜீல் வேதம்.

4 - தாவூத் (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்ட ஸபூர் வேதம்.

5 - இப்றாஹீம் (அலை) அவர்களுக்குக் கொடுக் கப்பட்ட கட்டளைகள்.

மேலே கூறப்பட்ட அனைத்து வேதங்களையும் நம்பிக்கை கொள்வது அவசிம் என்பதை நாம் அறிந்து கொண்டோம். எனவே இன்று மனிதர்களின் கையிலிருக்கும் வேதங்கள் தூதர்களுக்கு அருளப்பட்ட அதே வேதங்களா? அவைகளை நாம் நம்புவது அவசியமா? இவை பொதுப்படையான வினாக்களாகும். இதற்குரிய விடைகளும் அல்குர்ஆனுக்கு முன் அருளப்பட்ட வேதங்கள் (சில இன்று மனிதர்களிடம் காணப்பட்டாலும்) அவை தூதர்களுக்கு இறக்கப்பட்ட உண்மையானஉருவில் இல்லாததற்கான காரணங்களும் பின்வருமாறு:-

1. அந்த எல்லா வேதங்களிலும் மூலப் பகுதி தற்போது இருப்பில் இல்லை. அதன் மொழி பெயர்ப்புகளே உள்ளன. அவைகளை மொழி பெயர்த்தவர்களும், அவற்றிற்கு விளக்கம்

எழுதியவர்களின் விளக்கங்களும் ஒருங்கே இணைந்து மூலப் பகுதிகளுடன் ஒன்றாகக் கலக்கப்பட்டுள்ளன.

2. அவற்றின் மூலப் பிரதிகள் அவ்வத் தூதர்களுடைய காலங்களில் எழுதப்பட்டவைகளல்ல. மாறாகப் பல நூறு வருடங்களுக்குப் பின்னர் தூதர்களின் சீடர்கள் வாயிலாகக் கிடைத்த துணுக்குகளை வைத்தே அவை எழுதப்பட்டன. 'இன்ஜீல்' வேதமும் இதே பாதிப்பை அடைந்துள்ளது. மூலப் பிரதியை இழந்து, சீடர்களால் அறிவிக்கப்பட்ட செய்திகளை ஆதாரமாக வைத்து திரும்பவும் அவை எழுதப்பட்டன. இந்நிலைதான் தவ்றாத் வேதத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

3. அவ்வேதங்கள் யாவும் மானிட சமூகத்திற்குப் பொதுவானதாகக் காணப்படவில்லை. குறிப்பான ஒரு சமூகத்திற்கு அல்லது ஒரு கூட்டத்தினருக்கு மட்டும் பொருத்தமானதாகவே அமைந்திருந்தது. ஏனெனில் அந்தக் காலங்களில் தூதர்கள் முற்றுப்பெறவில்லை. எல்லாத் தூதர்களும் அவருக்குப் பின்னால் வரவிருக்கும் தூதரைப்பற்றி முன்னறிவிப்புச் செய்து கொண்டே இருந்தனர்.

4. அவ்வேதங்கள் இறக்கப்பட்ட மொழிகள் (மாற்றம் பெற்று அவை) இன்று எவராலும் புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ளன. அம்மொழிகளில் எழுதப்பட்டவைகள் ஏதும் இருந்தாலும் (அவற்றை விளங்கிக் கொள்ளமுடியாத நிலையில் உள்ளதால்) அவைதான் மூலப்பிரதிகள் என எடுப்பதற்கு எந்தவித அத்தாட்சிகளும் இல்லை. எனினும் அல்குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட அதே அமைப்பிலேயே மூலப் பிரதிகளுடன் இன்றுமுள்ளன. இதற்கான காரணங்கள் பின் வருமாறு:-

1. அல்குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றுள்ளான்.

**"நிச்சயமாக நாம்தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம். (அல் குர்ஆன்: சூறாதுல் ஹிஜ்ர்: 9)**

2. இது நபி (ஸல்) அவர்கள் காலத்தில் எழுதப்பட்டது. ஒவ்வொரு வசனமும், அத்தியாயமும் இறங்கும் போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் வஹீ (தூது) எழுதக்கூடியவர்களைக் கொண்டு குர்ஆனில் குறிப்பிட்ட இடங்களில் எழுதுமாறு ஏவினார்கள். நபித் தோழர்கள் அவற்றை அவை அருளப்பட்ட காரணங்களுடன் மனனம் செய்து கொண்டார்கள். இவைகள் தனியான புத்தகங்களில் பதியப்பட்டுள்ளன.

3. ஜிப்ரீல் (அலை) அவர்கள் வருடம்தோறும் நபி (ஸல்) அவர்களுடன் அல்குர்ஆனை மீட்டி ஓதுகின்றவர்களாக இருந்து வந்ததுடன் அன்னார் இறையடி சேர்ந்த வருடத்தில் இரு முறைகள் நபியவர்கள் திருமறை ஓத அவர்கள் அதை சரிபார்த்தார்கள்.

4. நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் அதன் பின்னும் அதிகமானோர் அல்குர்ஆனை மனனம் செய்திருந்தனர். இதனால் அது உள்ளங்களில் கூட பாதுகாப்பாக இருந்து வந்துள்ளது. எனவே இதில் ஏதாவது ஒரு எழுத்தை மாற்றினாலும் இதை மனனம் செய்திருப்பவர்கள் அதைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

5. அல்குர்ஆன் இறக்கப்பட்ட அறபு மொழி இன்று வரைக்கும் மாறாமல் நிலைத்திருக்கின்றது. அந்த மொழியைத் தெரிந்தவர்கள் சரளமாகப் பேசுகின்றனர். (குர்ஆனையும்) விளங்குகின்றனர். அதை ஓதப்பட்டால் (அது) எதிர் பார்க்கும் நோக்கங்கள் அது கொண்டிருக்கும் சொல்லர்த்தங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

6. அல்குர்ஆன் விரிவுரையில் ஈடுபட்டவர்கள் அதன் மூலப் பகுதியைத் தனியாக வைத்தே அதற்கு விரிவுரை எழுதினார்கள். இதன்மூலம் (மூலப் பகுதியில் விரிவுரை கலப்பதிலிருந்தும்) பாதுகாக்கப்பட்டது. அல்குர்ஆன் (அதன் மூலப்பிரதி) பாதுகாக்கப்பட்டுள்ளதற்கு பெரும் சான்று யாதெனில் அல்குர்ஆனில் பிரதிகளை (அரபு அல்லாத நாடுகளிலிருந்து) பெற்று ஒப்பு நோக்கினாலும் அவை ஒரே அமைப்பில் இருப்பதைக் காணலாம். அத்துடன் இப்பிரதிகளை மனனமிட்டவர்களுடன் ஒப்பு நோக்கினாலும் வேறுபாடுகளைக் காண முடியாது. இந்நிலை இதற்கு முன்வந்த (ஏனைய) வேதங்களுக்கு இல்லை. அவை அவற்றின் அடிப்படை மூலப் பிரதிகளையும், இறக்கப்பட்ட மொழிகளையும் இழந்து அவற்றின் சொற் பிரயோகங்களிலும், கருத்துகளிலும் முறன்பட்டுமுள்ளன.

7. அல்குர்ஆன் இறுதியாக வந்த இறுதித் தூதருக்கு அருளப்பப்பட்ட இறுதி வேதமாகும். எனவேதான் இது பாதுகாக்கப்பட வேண்டிய அவசியமான ஒன்றாக இருக்கிறது. இதிலே (இறுதி வேதத்திலே) மாற்றங்கள் ஏற்பட்டால், மனித சமூகம் திரும்பிப் பார்க்க ஒரு வேத நூல் இல்லாத நிலை ஏற்படும். அல்லாஹ்வின் ஞானங்களையும், அருளையும் ஒன்று சேர்த்து, அவனது படைப்பினங்களை வீணாக விட்டுவிடாமல் அல்லது அவர்களது மனோ இச்சைகளைப் பின்பற்றி சிந்தனைகளை அறியாமை, வழிகேடு ஆகிய இருள்களில் தட்டுத் தடுமாற விடாமல் இந்த இறுதி வேதத்தைப் பாதுகாத்து அருள் புரிந்துள்ளான்.

**4. தூதர்களை நம்பிக்கை கொள்ளல்:-**

தூதர்களை நம்புவது விசுவாசத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். அவர்களில் சிலரை ஏற்பதும் சிலரை மறுப்பதும்

கூடாது. அவர்களின் நாமங்கள் தெரிந்தாலோ தெரியாவிட்டாலோ அவர்கள் அனைவரையும் நம்புவதை அல்லாஹ் எம்மீது கடமையாக்கியுள்ளான். ஏனெனில் அவர்கள் சங்கிலித் தொடர் போன்றவர்கள். முன்னர் வந்த ஒரு தூதுவரின் தூதைப் பூர்த்தி செய்யவே மற்றவர் அனுப்பப்பட்டார். இத்தூதர்களின் வருகை இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடன் முற்றுப்பெற்றது. இத்தூதர்களில் சிலரை ஏற்று மற்றவர்களை மறுப்பது அனைவரையும் மறுப்பதற்குச் சமமாகும். ஏனெனில் இவர்களின் வருகைத் தொடரைத் துண்டிப்பவர் அதனால் கிடைக்கும் பிரயோசனத்தையும் துண்டித்தவராகின்றார். அல்குர்ஆனில் இருபத்தைந்து நபிமார்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளது. ஏனையோரின் பெயர்கள் கூறப்படவில்லை.

**தூதர்கள் சிலரை (நாம் அனுப்பி) அவர்களுடைய சரித்திரங்களையும் முன்னர் உமக்குக் கூறியுள்ளோம். இன்னும் (வேறுபல தூதர்களையும் அனுப்பினோம். ஆனால்) அவர்களுடைய சரித்திரங்களை உமக்குக் கூறவில்லை. (அல்குர்ஆன்)**

தூதர்களை நம்புவதன் அவசியம் யாதெனில் இவர்களின் மூலமேயன்றி வேறு விதத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளை அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள்தான் அல்லாஹ்வின் கட்டளைகளை (மனிதர்களுக்கு) எத்திவைக்கக் கூடியவர்கள் எனவே எவ்வித வேறுபாடுமின்றி ஒரே விதத்தில் எல்லோரையும் நம்ப வேண்டும்.

**முஹம்மது (ஸல்) அவர்களுக்குச் சில சிறப்பு அம்சங்கள் உள்ளன அவையாவன:-**

1. இவருக்கு முன் வந்தவர்கள் அவர்களின் கூட்டத்தினருக்கு மட்டுமே வந்தவர்கள் ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள்

இறுதித்தூதர். அவர்களுக்குப் பிறகு தூதர்கள் வருவதில்லை என்பதால் இவர்களின் தூதுச் செய்தி படைப்புக்கள் அனைத்திற்கும் பொதுவானதாகும்.

2. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்பு வந்தவர்களின் அறிவுரைகளும், அற்புதங்களும் அவர்களுடனேயே முடிந்து விட்டன. ஆனால் இவரின் அற்புதங்கள் இன்று வரைக்கும் நிலைத்திருக்கின்றன. இவரின் போதனைகள் பாதுகாப்பான ஏடுகளில் பதிவாகி இருப்பதுடன் இன்றும் எமது கரங்களில் அவை தவள்ந்து கொண்டிருக்கின்றன.

3. முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்தவை அதற்கு முன்னர் கொண்டு வரப்பட்டவைகளையும் அடக்கியுள்ளன. முன்னய தூதர்களின் தூது போதனைகள் அனைத்தும் குறைபாடு உள்ளவைகளாகவே இருக்கின்றன. இத்தூதைக் கட்டியெழுப்பும் விஷயத்தில் பல மனிதர்கள் கூட்டுச் சேர்ந்தனர். ஒவ்வொரு தூதரும் ஒவ்வொரு பகுதியைக் கட்டியெழுப்பினர். இந்நிலை முஹம்மது (ஸல்) அவர்களால் பூர்த்தியாக்கப்படும் வரை தொடர்ந்தது.

**5. இறுதிநாளைப் பற்றிய நம்பிக்கை:-**

இறுதி நாளின் பின்வரும் அம்சங்களை நம்பிக்கை கொள்ள வேண்டும்.

1. இவ்வுலகிற்கும் அதிலுள்ள படைப்பினங்களுக்கும் ஒருமுடிவு உண்டு என்று நம்பவேண்டும்.

2. அல்லாஹ் திரும்பவும் படைப்புக்களை எழுப்புவான் என்று நம்ப வேண்டும்.

3. மனிதர்கள் தத்தமது செயல்களுக்கேற்ப விசாரிக் கப்படுவார்கள். எவர் நல்லதைச் செய்தாரோ அது அவருக்குச் சாதகமாக அமைந்துவிடும். எவர் தீமை செய்தாரோ அது

அவருக்குப் பாதமாக அமைந்து விடும். ஒவ்வொருவரும் தத்தமது செயல்களுக்கேற்ப கூலி வழங்கப்படுவர்.

4. அடியார்களின் செயல்கள் யாவும் பதியப்பட்டு கணக்கிடப்பட்டு கேள்வி கணக்கின் போது அவர்களுக்கு எடுத்துக் காட்டப்படும்.

4. உண்மை முஸ்லிம்கள் சுவனம் நுழைவார்கள். இறைவனை மறுக்கும் (காபிர்கள்) நரகம் நுழைவார்கள். எனவே மரணமென்பது ஒருவனின் வாழ்க்கை முடிவு அல்ல மாறாக (அது குறிப்பிட்ட) குறுகிய இவ்வுலக வாழ்வுக்கும், நிரந்தரமான முடிவற்ற மறுமை வாழ்வுக்கும் இடையிலுள்ள ஒரு பிரிவாகும் என்பதை உணரமுடிகிறது. மறுமையில் எல்லா மனிதர்களும் ஒரே நிலையில் எழுப்பப்படுவார்களா? என்றால் நிச்சயமாக அவர்கள் பலதரப்பட்டவர்களாக இருப்பர். எவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, அவனுக்கு வழிபடுகிறாரோ அவருக்கு நற்கூலி கிடைக்கும். மாறாக எவர் அவனுக்கு மாறு செய்கின்றாரோ அவர் கடுமையான தண்டனைக்கு ஆளாவார். இறுதி நாள்பற்றி நம்புவது புத்தி சார்ந்த ஒரு தேவையாகும். பொதுவாக மனிதர்கள் இவ்வுலகில் செய்கின்ற செயல்களுக்குத் தக்க பிரதிபலனையோ முடிவுகளையோ (வெளிக்) காண்பதில்லை. நிலைமை இவ்வாறு தொடர்வது சாத்தியமா? அநியாயமிழைத்தவன் தண்டிக்கப்படாமலும், அநியாயம் இழைக்கப்பட்டவன் வெற்றி பெறாமல் இருப்பதும் சிந்தனைக்கு உகந்ததல்ல. எனவே நீதியும், நேர்மையும், பின்பற்றப்பட்டு ஒவ்வொருவருக்கும் கூலி கொடுக்கப்படுவது அவசியம். ஆனால் இந்தத் தீர்ப்பு இவ்வுலகிலல்ல. மாறாக மறு உலகில்தான். இது உறுதியென்பதற்கு நபி (ஸல்) அவர்கள் அறிவித்த செய்திகளே போதுமானது. இறுதிநாள் பற்றி நம்பிக்கை கொள்வதின் இலட்சியம் யாதெனில், நல்லவர்கள்

நற்செயல்கள் புரிய முயற்சிக்க வேண்டும். ஏனையோர் பாவங்களைவிட்டும், கொடுமைகளைவிட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வுலக வாழ்வின் சோதனை களில்தான் இதன் பிரதிபலன் தெளிவாகும்.

**6. விதியை நம்புதல்.**

இவ்வுலகில் நடக்கும் எல்லாம் அல்லாஹ்வின் நியதிப்படியே நடக்கிறது என்பதை நம்புதல்: விதியை நம்புதல் இந்த மார்க்கத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். இதனை நம்பாதவர் எவரிடமும் அல்லாஹ் எச்செயலையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவர் தொழுகையை நிலை நாட்டி, நோன்பு நோற்று, தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொண்டாலும் சரியே, ஏனெனில் இவர்கள் அல்லாஹ்வைப் பற்றி முழுமையான முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. விதியை நம்பாதவன் அல்லாஹ் எதற்கும் சக்தியற்றவன், எதையும் அறியாதவன், இயலாமையில் உள்ளவன், மடமையிலுள்ளவன் என நம்புகின்ற நிலையை அடைந்து விடுவான். அவ்விதமான குறைபாடுகள் உள்ள ஒருவன் இறைவனாயிருக்கத் தகுதியற்றவன். இறைவன் என்ற தன்மையின் அடிப்படை யாதெனில், அவன் நித்திய ஜீவனாக, எதற்கும் ஆற்றல் படைத்த, சக்தி வாய்ந்தவனாக, எல்லாவற்றையும் கேட்கும், பார்க்கும் (அவதானிக்கும்) திறனுள்ளவனாக, இன்னும் அல்லாஹ்வுக்குரிய பண்புகளையுடையவனாக இருக்க வேண்டும். அல்லாஹ் விதித்த விதியை நம்பாதவன் அவனது நற்பண்புகளை மறுத்தவனாகின்றான்.

விதியை நம்புவதற்குச் சில படித்தரங்கள் உள்ளன அவையாவன:-

1. அல்லாஹ் அனைத்தையும் அறிந்து அவற்றைப் படைக்க முன்பே அவற்றிற்குரிய திறன்களை எழுதிவிட்டான் என்று நம்புவது.

2. அல்லாஹ் ஒன்றைச் செய்வதற்கு நாடினால், ஆகுக! என்று கூற அது ஆகிவிடும் என்பதை நம்புதல், அவன் ஒன்றை உருவாக்க நாடினால் உண்டாக்கி விடுவான். ஒன்றைத் தடுக்க நாடினால், உருவாக்குவதைத் தடுத்து விடுவான்.

3. இறைவனன்றி இவ்வுலகில் இருக்கும் எல்லாம் நல்லதோ, கெட்டதோ அனைத்தும் அல்லாஹ்வின் படைப்புக்கள் என்று நம்புதல். இவற்றை அல்லாஹ் அவன் அறிந்த படிப்பினைக்காகவே படைத்துள்ளான். அவனது அனைத்துப் படைப்புகளும் ஏதேனுமொரு படிப்பினை தரக்கூடியன. அவன் அளவற்ற ஞானமும் அறிவும் உள்ளவன்.

4. இப்பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியும், அவனது அனுமதிப்படியுமே நடக்கின்றன என்பதை நம்புதல். ஏனெனில் இப்பிரபஞ்சம் அவனுக்குரியது. இதில் அவனது உத்தரவின்றி எதுவும் நடைபெறாது. அவனது உத்தரவு இல்லாதவற்றையும், அவனுக்குப் பொருத்தம் அற்றவைகளையும் தடுப்பதற்கு அவனுக்கு சக்தி உண்டு. அவன் அவனது அடிமைகளிடம் இறை நிராகரிப்பை ஏற்பதில்லை. மேலும் (அவர்களுக்கு மானக்கேடான) பாபமான காரியங்களை ஏவுவதுமில்லை. அழிவுக்கானவற்றை அவன் விரும்புவதுமில்லை. பாபமான காரியங்கள் நிகழும் போது அவன் தடுக்காமல் இருப்பதெல்லாம் ஒரு படிப்பினைக்காகவே. அக்காரியங்களுக்குத் தகுந்த பிரதிபலனைக் காணும்போது இதை அறியலாம். இந்த விதியை நம்புவதால், நற்செயல்கள் புரிவதற்கான சக்தியை மனிதன் பெறுகிறான். ஏனெனில் மனிதன் உயிர்வாழ்வதும்

மரணிப்பதும், அல்லாஹ்வின் கைவசம்தான் உள்ளது என்றும், அது ஏனயோரின் கையில் இல்லை என்றும் அவன் அறிகின்றான். எவரும் தனது வாழ்நாளில் ஒரு நிமிடமேனும் குறைத்துக்கொள்வதற்கு முடியாது. ஒருவரது வாழ்கை முடியும் காலம் வந்தால் அதனைத் தடுப்பதற்கும் யாராலும் முடியாது. அதுபோல் அவரது குறித்த நேரம் வந்துவிட்டால் ஒரு நாளிகை பிந்தவும்மாட்டார். முந்தவும்மாட்டார். இவ்வுலகில் ஒருவனுக்குக் கொடுத்திருக்கும் ஒய்வை அல்லாஹ் அவனுக்கு எழுதி வைத்தபடி அது கிடைத்தே தீரும். அதைத் தடைசெய்வதற்கு மனிதர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தாலும் முடியாது. அல்லாஹ் ஒரு மனிதனுக்கு ஒன்றை எழுதாது, அவனது நியதியில் வரையறுக்காது இருந்தால் உலக மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவனுக்கு உதவிசெய்ய நாடினாலும், அது முடியாத காரியமாகும். ஒரு மனிதனுக்குரிய கடமை (காரணங்களையிட்டு) செயல்களைச் செய்வதால் அதற்கான பிரதிபலன் அல்லாஹ்விடம் உண்டு.

இவ்விடயத்தில் நாம் முன்வைத்த அம்சங்களைப் பொறுத்த வரையில் இந்த விதியை நம்புவது எமது கடமையெனக் கண்டோம். இதிலுள்ள அம்சங்கள் ஐம்புலன்களுக்கு எட்டாது. எனவே அதன் அமைப்பை அறியாதிருக்கின்றோம். எனவே எமது நிலை என்ன? இங்கு மறைவானவற்றையும் நம்பிக்கை கொள்கின்றோம். மறைவானவற்றை நம்பிக்கை கொள்வதும் இஸ்லாத்தின் அடிப்படைகளில் முக்கிய ஒன்றாகும். இதை நம்புவதற்குரிய சக்தியை அல்லாஹ் எமக்குத் தந்துள்ளான். அல்லாஹ்வின் அமைப்பு (அதற்குரிய நியதிகள்) அவனுடைய பண்புகள் ஆகியவற்றை ஒரு மனிதனது புலன்களால் உணர்ந்து அவனது புத்தியால் நிர்ணயிக்க முடியாவிட்டாலும் அவன் இருக்கின்றான் என்ற அத்தாட்சிகளை நாம்

காண்கிறோம். அவன் இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள வற்றையும் இயக்குகின்றான். மறைவானவைகளை மனிதனால் உணர்ந்து கொள்ள முடியாவிட்டாலும் பல அருட்கொடைகளை அல்லாஹ் மனிதனுக்குக் கொடுத்துள்ளான். அவற்றுள் மிகவும் முக்கியமானது என்னவென்றால் மறைவானவற்றை ஏற்றுக் கொள்ளும் வல்லமையாகும்.

பொதுப்படையாகவே எல்லோரும் நம்பக் கூடிய மறைவான ஒன்றுதான் "அர்ரூஹ்" என்னும் உயிர். அதன் தன்மையை நாம் காணவில்லை ஆனால் அது இருக்கிறது என்பதை நாம் அறிகின்றோம். அவ்வாறே உயிர் உடலுடன் சேர்ந்து கொள்கிறது. விட்டுப்பிரிகிறது. ஒருவன் இம்மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள மறைவான அம்சங்களை மறுக்கின்றானெனில் அவன் இம்மார்க்கத்தின் அடிப்படைகளை இழக்க வேண்டி ஏற்படும். அவன் அல்லாஹ்வை, மலக்குகளை, மறுமையை, இன்னும் மறைவான அம்சங்களை மறுக்கவேண்டிய நிலை ஏற்படும். மறைவானவற்றை நம்புவது இறையச்சம் உள்ளவர்களின் பண்பாகும்.

**இது அல்லாஹுவின் திருவேதமாகும் இதில் எந்த சந்தேகமுமில்லை. பயபக்தி உடையோருக்கு (இது) நேர் வழிகாட்டியாகும். அவர்கள் (புலன்களுக்கு எட்டாத) மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் (முறைப்படி) கடைப்பிடித்து ஒழுகுவார்கள். இன்னும் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவும் செய்வார்கள். (அல் குர்ஆன்- 2: 2,3)**

மேலும் மறைவானவற்றை நம்பிக்கை கொள்ளுமாறு அல்லாஹ் அவனது தூதர்களின் வாயிலாக அறிவித்திருப்பதே போதுமான சான்றாகும். எனவே எவர் இம்மறைவானவற்றை

நம்பவில்லையோ, அவர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் மறுத்தவராவார்.

**தீனும் ஷரீஅத்தும்,**

அஷ்ஷரீஆ என்னும் மார்க்க விதிமுறைகளும் அனுஸ்டானங்களும் இந்த தீனின் அடிப்படைகளாகும். இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி இவற்றைச் செயல் படுத்துவதுதான் அல்லாஹு'வை வணங்குவதாக அமைந்து விடும். ஏனெனில் அல்லாஹு'வை வணங்குவதென்றால் அவனது கட்டளைகளை ஏற்று விலக்கல்களைத் தவிர்ந்து நடப்பதாகும். அல்லாஹ் எம்மீது இறக்கியவற்றைப் பின்பற்றுமாறு எம்மை ஏவியுள்ளான்.

**(மனிதர்களே") உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு இறக்கப்பட்டதைப் பின்பற்றுங்கள்: (அல்குர்ஆன். அல் அ.'.ராப்:3)**

**நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும் ஆகவே இதனைப் பின்பற்றுங்கள் இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். (அல்குர்ஆன்: அல்அன்ஆம்:153)**

இந்த மனித சமூகம் (இவ்வுலகில் செயல்படுவதற்குத்) தேவைப்படும் அனைத்தையும் அல்லாஹ் தெளிவாக அவனது வேதத்தில் இறக்கி வைத்துள்ளான். அவற்றை அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் பூரனமாக விளக்கியுள்ளார்கள். இந்தத் தூதர் அதனை மனனம் செய்திருந்ததுடன் அது ஏடுகளிலும் பதியப்பட்டிருந்தது அது இன்றும் மனிதர்களின் கரங்களில் இருக்கிறது.

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் மனிதன் பாதுகாக்க வேண்டிய சில அம்சங்கள் பின்வருமாறு:

## 1. தீன் எனும் மார்க்கம்

அல்லாஹுத்தஆலா மார்க்க அனுஸ்டானங்களை ஏற்படுத்தி தூதர்களை அனுப்பி வேதங்களை இறக்கி வைத்ததெல்லாம் இம்மார்க்கத்தை சீர்படுத்துவதற்கும், பலதெய்வக் கொள்கையால் வழிதவறிய மக்களை ஓரிறைக் கொள்கையின்பால கொண்டுவந்து நேர்வழிப்படுத்து வதற்குமாகும். இன்னும் இம்மார்க்கத்தில் மனிதர்கள் சரியான கண்ணோட்டம் கொள்வதையும், ஒரே இரட்சகனை வணங்குவதையும் தடுத்து பலதெய்வக் கொள்கையைப் புகுத்த முற்படுவோருக்கு எதிராக புனித யுத்தமான அல்ஜிஹாதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான்.

## 2. புத்தி (அறிவு)

புத்தியை மறைத்து அல்லது அதன் செயல்பாட்டைத் தடுத்து அதை வழிகெடுக்கும் சகல அம்சங்களையும் இஸ்லாம் தடைசெய்கிறது. இவ்வாறான அம்சங்கள் உண்ணும் உணவாகவோ பருகும் பானமாகவோ இருந்தாலும் அவை தடைசெய்யப்பட்டதாகும்.

**ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்களை வழிபடுதலும் அம்புகளை எறிந்து குறி கேட்டலும் ஷெய்த்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ளவைகளாகும். ஆகவே நீங்கள் அவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன்: அல்மாயிதா:90)**

## 3. உயிரைப் பாதுகாத்தல்:

உயிருக்குப் பாதகம் ஏற்படுத்தும் அனைத்தையும் இஸ்லாம் தடைசெய்கிறது. எந்தவொரு மனிதனும் தனது உயிரைப் போக்கி தற்கொலை செய்து கொள்ளவோ, அதற்குத் தீங்கு

விளைவித்துக் கொள்ளவோ முடியாது. இதே போன்று ஏனையோரைத் தாக்கி அவர்களைக் கொலை செய்யவோ அவர்களின் உயிர்களுக்குப் பாதகம் ஏற்படுத்தி பலவீனப்படுத்தவோ முடியாது. எனவேதான் மனித உயிர்களின் பாதுகாப்பைக் கருதி கொலைக்குப் பகரமாகக் கொலை செய்வதை இஸ்லாமிய (ஷரீஅத்) மார்க்கச் சட்டமாக அமைத்துள்ளது. (கொலைக் குற்றம் செய்த) ஒரு தீய உயிரைக் கொலை செய்வதேதான் சிறந்தது. இக்குற்றவாளிக்கு எதிராக இவ்வாறு செயல்படாது வெறுமனே விட்டுவிடுவது இன்னும் பல உயிர்களை மோசப்படுத்துவதற்கு வழிகோலுகின்றது. கொல்லப்பட்டவரின் நெருங்கிய உறவினர்கள் கொன்றவனை மன்னிக்காதவரை ஏன் குற்றவாளியின் மீது நாம் இரக்கம் காட்டவேண்டும்.

**4. பொருளாதாரப் பாதுகாப்பு:**

பணம் சம்பாதித்து உணவைத் தேடுவது ஷரீஅத்தின் பார்வையில் அவசியமான ஒன்று. இவ்வாறே அப்பொருளாதாரத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதுடன் அதனைத் தேவையற்ற முறைகளில் வீண்விரயம் செய்வதற்கு யாருக்கும் இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. இஸ்லாம் அனுமதித்த விஷயங்களிலும்கூட வீண்விரயம் செய்வது கூடாது. **உண்ணுங்கள் பருகுங்கள் எனினும் வீண்விரயம் செய்யாதீர்கள். (அல்குர்ஆன்- அல் அ:ஃராப்: 31)**

ஒரு மனிதனது சொந்தச் செல்வத்தை எல்லை கடந்து வீண் விரயம் செய்வது கூடாது என்றிருக்க, பிறரின் சொத்துக்களை பாழாக்குவதற்கோ, அபகரிப்பதற்கோ, எவ்விதத்திலும் அனுமதி கிடையாது. பிறர் முதலைச் சுரண்டி வாழ்வதைப் புனித இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. எனவேதான்

திருடியவனது கையைத் துண்டிக்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. வட்டியை முற்றாக இஸ்லாம் தடை செய்வதற்கான காரணம் பிறர் பொருளைச் சுரண்டல், அபகரித்தல் போன்ற தீய பண்பாடுகளை விட்டு மனிதன் நல்லுணர்வு பெறுவதற்காகும்.

## 5. மனிதர்களின் மானத்தைப் பாதுகாத்தல்:

மனிதர்களின் மரியாதையையும், மானத்தையும் பாதுகாக்குமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. ஒருவனது மரியாதையைப் போக்கி அவனை மக்கள் மத்தியில் அவமானப்படுத்துவது இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பாரிய குற்றமாகும். மனிதனின் மானம், மரியாதை ஆகியவற்றைப் பெறுமதி மிக்கதாகக் கருதி அவற்றைப் பாதுகாக்குமாறு மானிட சமூகத்தை இஸ்லாம் கேட்டுக் கொள்கின்றது. இதை மீறுபவர்களுக்கு எதிராக தண்டனையையும் விதித்துள்ளது.

ஷரீஆவின் பார்வையில் பாதுகாக்கப்பட வேண்டிய சில அம்சங்களையும், அவற்றின் அடிப்படைகளையும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

## ஷரீஅத்தின் அடிப்படைகள்"

இதன் அடிப்படைகள் அல்குர்ஆனும் அதற்கு விளக்கமாகவும் விரிவுரையாகவும் அமைந்துள்ள நபி (ஸல்) அவர்களின் வழிமுறையுமாகும். இவ்விரு அடிப்படை களிலிருந்தும் சட்டங்களை வகுத்துக்காட்ட அறிஞர்கள் மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இஸ்லாம் இறுதி வேதமாக இருப்பதால் அதன் அடிப்படைகள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொருத்தமானதாகவே உள்ளது. எனவேதான் இவ்வடிப்படைகளிலிருந்து சட்டங்கள் வகுத்த சட்டக்கலை

வல்லுனர்களின் விளக்கங்களுக்கு ஏற்ப சட்டவிதிகளில் பல பிரிவுகள் ஏற்படலாயின. இவ்வாறு வகுக்கப்பட்ட சட்டங்களே அல்பிக்ஹ் (சட்டக்கலை) என்று அழைக்கப்படுகிறன்து. இக்கலையில் தேர்ச்சியும், பிரபல்யமும் வாய்ந்த மேதைகளும் அவர்களது மாணவர்களுமான இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் அஹ்மதிப்னு ஹம்பல், இமாம் ஷாபிஈ ஆகியோர் வகுத்துள்ள சட்டங்கள் நான்கு விதமாக அமைந்துள்ளது. இதைத்தான் நான்கு மத்ஹப்கள் என்று அழைக் கப்படுகிறது. இன்நான்கு மத்ஹபுகளிலும் எது சரியான ஆதாரங்களுடன் வகுக்கப்பட்டுள்ளதோ அதை நாம் எடுத்துக்கொள்ளலாம். இதுவல்லாது வேறு அறிஞர்களது கூற்றுக்கள் நம்பகரமானதாக இருப்பின் அவற்றையும் எடுத்துக்கொள்ளலாம்.

### அல்ஜிஹாத் (புனிதப் போர்)

புனித மார்க்கமான இஸ்லாத்தை மனித குலம் ஏற்று சாந்தி, சமாதானம் பெறுவதே இஸ்லாத்தின் குறிக் கோளாகும். இந்நன்நோக்கத்திற்கு எதிராக செயல் படுபவர்களைத் தடுத்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாக்கும் நோக்குடன் புனிதப் போர் செய்வதை இறைவன் விதியாக்கியுள்ளான். இப்புனிதப் போர் ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு அடிமையாக வாழ்வைதைத் தடுக்கிறது. அவ்வாறே ஆட்சியாளர்கள், தலைவர்களுக்கு நீதிக்குப் புறம்பான முறையில் கட்டுப்படுவதிலிருந்தும் பாதுகாக்கிறது. மரங்கள், கற்கள், சிலைகள், சமாதிகள் ஆகியவற்றிற்கு சாஷ்டாங்கம் செய்து, அவற்றிற்கு வணக்கம் செலுத்திவரும் மூட நம்பிக்கை படைத்தோர், அறியாமை இருளில் மூழ்கி அவதிப்படுவோர் அனைவரையும் ஓரிறை வழிபாட்டின்பால் கொண்டு வருவதற்கு

உறுதுணையாய் அமைகிறது. இன்னும் நெருக்கடியான இவ்வுலக வாழ்விலிருந்து விசாலமான மறுவுலக வாழ்வின் சுபீட்சத்தை மனிதன் பெறுவதற்காகவும் அல்லாஹ் இப்புனிதப் போரைக் கடமையாக்கி உள்ளான். மேலே கூறப்பட்ட இஸ்லாத்தின் அடிப்படைகளை அறிந்து அதனை செயல்படுத்துவது தனி நபர்களினதும் (கூட்டு வாழ்கையில்) கூட்டமாக இருப்பவர்களினதும் கடமை என்பதை நாம் அறிகிறோம்.

**தனிநபர்களின் மீதான கடமைகள்.**

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனி நபருக்கும் சில உரிமைகள் உண்டு. அவை நான்கு வகைப்படுகின்றன. அவையாவன:-

1. அல்லாஹ்வுக்குரிய உரிமைகள்.
2. உயிருக்குரிய உரிமைகள்.
3. அடிமைகளுக்குரிய உரிமைகள்.
4. இவ்வுலகில் பாவிப்பதற்கும் அதில் இருந்து பயன் பெறுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளவைகள் ஒருவனிடம் இருக்கும் பொழுது (சொத்துக்கள்) அவற்றுக்குரிய உரிமைகள்.

இந்நான்கு உரிமைகளையும் அறிந்து தூய்மையான எண்ணத்துடனும், உண்மையுடனும், நம்பிக்கையுடனும் நிறைவேற்றுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். மேலே கூறிய ஒவ்வொன்றைப் பற்றியும் தெளிவாக இஸ்லாம் விளக்கியிருப்பதைப் பார்க்க முடிகிறது. அவ்வாறே அவற்றை நிறைவேற்றும் விதிமுறைகள் நெறிமுறைகளையும், இலகுவான முறையில், எந்த ஒரு உரிமையையும் தவறவிடாத விதத்தில் அவன் செயல்படுத்துவதற்கும் அவைகளை இலகுபடுத்தி விவரிக் கப்பட்டுள்ளது.

**அல்லாஹ்வுக்குச் சேரவேண்டிய உரிமைகள்:-**

அல்லாஹ்வுக்குச் சேரவேண்டிய உரிமைகளில் முதன்மையானது அவனை மட்டும் விசுவாசித்து, வணங்குவதாகும். அவனன்றி வேறு எவற்றையும் கடவுளாகவோ, இரட்சகனாகவோ எடுக்கக்கூடாது. நாம் மேலே விவரித்திருப்பதைப் போன்று "**லாஇலாஹ இல்லல்லாஹ்**" என்ற கலிமாவை நம்புவதன் மூலம் இவ்வுரிமையை நிறைவேற்ற வேண்டும்.

**அல்லாஹ்வுக்குச் சேரவேண்டிய இரண்டாவது உரிமை:**

அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி அவனிடமிருந்து வந்துள்ள நேர்வழி, சத்திய மார்க்கம் ஆகியவற்றுக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும். இது மேலே நாம் விவரித்துள்ளதைப் போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்ற உறுதி மொழியின் கருத்தாகும்.

**அவனுக்குரிய மூன்றாவது உரிமை:**

அல்லாஹ்வின் சிறப்புக்குரிய வேதத்தில் விளக்கப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களைப் பின்பற்றி இந்த வேதத்திற்கு விரிவுரையாகவும், விளக்கமாகவும் வந்துள்ள நபி (ஸல்) அவர்களின் வழிமுறையின் அடிப்படையில் நிறைவேற்றி வருதல்.

**அவனுக்குரிய நான்காவது உரிமை:**

மனிதனுக்கு விதிக்கப்பட்டுள்ள மேற் கூறப்பட்ட கடமைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இவ்வுரிமை மற்றவைகளிலும் பார்க்க தனித்துவம் பெறுவதற்கான காரணம் என்னவெனில் ஏனைய உரிமைகள் தன்னையோ அல்லது ஏனைய படைப்பினங்களைச் சார்ந்ததாகவோ இருக்கும். ஆனால் இவ்வுரிமையை நிறைவேற்றுவதற்கு மனிதன் பற்பல தியாகங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு மனிதன் மீது கடமையாக்கப்பட்ட தொழுகையை அல்லது நோன்பை நிறைவேற்றும் பொழுது தனக்குச் சொந்தமான

எத்தனையோ உரிமைகளை விட்டுக்கொடுத்து தியாகம் செய்யவேண்டியுள்ளது. தொழுகையை நிறைவேற்றுவதற்கு அதிகாலையில் எழுந்து குளிரான நீராயினும் அதனால் வுழூ செய்யவேண்டும். பல தொழில்களையும் விட்டுவிட்டு ஒரு நாளில் பல தடவைகள் இரவும் பகலும் இத்தொழுகையை நிறைவேற்ற வேண்டும். நோன்பை நிறைவேற்றுவதற்காக தனது உணவையும் குடிபானங்களையும் தவிர்த்து ஒரு மாதம் தியாகம் செய்ய வேண்டும். அதுமட்டுமன்றி தனது ஆசைகளையும், உள்ளத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். கடமையான ஸகாத்தை நிறைவேற்றும் போது செல்வத்தின் மீதுள்ள விருப்பத்திலும் பார்க்க அல்லாஹ்வின்மீது வைத்துள்ள விருப்பத்தையே தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு பிரயாணக் கஷ்டங்கள் வேறு பல சிரமங்களையும் எதிர்நோக்கி அதிகமான பணத்தையும் செலவு செய்ய வேண்டும். ஜிஹாதிலே தனது உயிர், பணம் முதலியவற்றை தியாகம் செய்கிறான். இவ்வாறு அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்காக மனிதன் தனது உரிமைகளை சிற்றளவிலோ பெரிய அளவிலோ அர்ப்பணிக்க வேண்டி உள்ளது. உதாரணமாக தொழுகையில் ஒரு அடிமை தனது இரட்சகனான அல்லாஹ்வை வணங்குவதற்கும், அவனுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தன் எஜமானின் பணிவிடைகளை நிறுத்த வேண்டி உள்ளது. ஹஜ்ஜுக் கடமைக்காகச் செல்லுகின்றபோது தனது தொழில், வாழ்க்கை நடவடிக்கைகள், குடும்பம், பிள்ளைகள் அனைத்தையும் பிரிந்து இறை இல்லமாகிய (கஃபா)விற்குச் செல்ல வேண்டும். எனவே இங்கும் சந்தேகத்திற்கு இடமின்றி மனிதனின் பல நடவடிக்கைகள் தடைப்படுகின்றது. மேலும் ஜிஹாத் எனும் புனிதப் போரில் ஒரு மனிதன் மற்றவனைக்

கொலைசெய்கிறான். இதை அல்லாஹ்வுக்காகவேயன்றி வேறு எவருக்காகவும் செய்யவில்லை. இவ்வாறு அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்கு தம்மிடமுள்ள பல பொருள்களைத் தியாகம் செய்யவேண்டியுள்ளது. இவற்றிற்கு உதாரணமாக மிருகங்களை அறுத்துப் பலியிடுதல், பணத்தைச் செலவிடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றும் விடயத்தில் தனது அடிமைகள் சிரமப்படக் கூடாது என்பதற்காக அவற்றுக்குச் சில சலுகைகளையும் அமைத்துள்ளான். இதற்குத் தொழுகையை உதாரணமாகக் கூறலாம். இத்தொழுகையின் மூலம் அல்லாஹ் இலகுவை நாடினானே அன்றி கஷ்டத்தை நாடவில்லை. வுழு செய்வதற்கு தண்ணீரைப் பெறாத பட்சத்தில் அல்லது நோயாளியாக இருந்தால் சுத்தமான மண்ணால் முகத்தையும், கைகளையும் தடவிக் கொள்ளலாம். பிரயாணத்திலிருக்கும் போது நான்கு றக்அத்துக்களைக் கொண்ட தொழுகைகளை இரண்டு றக்அத்துக்களாகச் சுருக்கித் தொழுது கொள்ள முடியும். நோயாளியாக இருக்கும் போது நின்று தொழுவதற்கு முடியாத பட்சத்தில் இருந்து அல்லது சாய்ந்து தொழுது கொள்ள முடியும். தொழுகையில் அல்குர்ஆனை ஓதும் போது நீண்ட நேரத்தைச் செலவு செய்து அதிகமாக ஓத வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. கொஞ்சமாக ஓதினாலும் போதுமானது. இவ்விடயத்தில் மார்க்கத் தீர்ப்பு இதுதான். அதாவது தனியாக ஒய்வாக இருந்து தொழும்பொழுது நாடிய விதத்தில் எவ்வளவும் சூறா பகறா, ஆலஇம்றான், அல்லது அன்னிசா போன்ற நீண்ட சூறாக்களை ஓதிக்கொள்ளலாம். ஆனால் நீ தொழுகையை நடாத்தும் இமாமாக இருந்தால் உனக்குப்பின்னால் இருப்பவர்களைக் கருத்திற் கொண்டு சுருக்கமான சூறாக்கள்

ஓதவேண்டிய இடங்களில் விரிவான சூறாக்களை ஓதக்கூடாது. இன்னும் பர்லான தொழுகைகளை நிறைவேற்றி, நபிலான சுன்னத்தான தொழுகைகளையும் தொழுது அல்லாஹ்வை நெருங்கும் அடியானை அல்லாஹ் விரும்புகின்றான். ஆனால் தூக்கத்தையும், ஓய்வையும், சம்பாதிக்கும் நேரத்தையும், சுன்னத்துத் தொழுகைகளில் செலவிட வேண்டுமென்றோ அல்லது உனது உலக நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்துச் செய்து தொழுகையிலேயே இருக்க வேண்டுமென்றோ அல்லாஹ் விரும்பவில்லை. அல்லாஹ்வின் அடியார்கள் மீதுள்ள கடமைகள் உன்மீதும் இருக்கிறது என்பதை உம்மால் மறுக்க முடியாது. இவ்வாறே நோன்பு விஷயத்திலும் அல்லாஹ் அதிகமான சலுகைகளைத் தந்துள்ளான். வருடத்தில் ஒரு மாதத்தைத் தவிர ஏனைய காலங்களில் அல்லாஹ் நோன்பைக் கடமையாக்கவில்லை. நோயின் போது, அல்லது பிரயாணத்தின் போது (இந்தக் கடமையான) நோன்பைப் பிற்படுத்துவதற்கும் சலுகைகள் உண்டு. நோன்பின் நேரத்தை ஒரு நிமிடமேனும் அதிகரிக்க யாராலும் முடியாது. மேலும் அதிகாலை பஜ்று (நேரம் என்ற) வெள்ளை நூல் (இரவு என்ற) கறுப்பு நூலிலிருந்து தெளிவாகத் தெரியும் வரை நோன்பாளி உண்ணவும், பருகவும் முடியும். பின்பு அவன் சூரியன் மறையும் வரைக்கும் நோன்பைப் பூர்த்தியாக்கினால் உடனடியாக அவன் நோன்பு திறக்க வேண்டும். இவ்வாறே பர்லான நோன்புக்குப் பிறகு சுன்னத்தான சில நோன்புகளை நோற்பதை அல்லாஹ் விரும்புகின்றான். ஆனால் தொழில் புரியாமல் உடல் நிலை பாதிக்கப்படக்கூடிய விதத்தில் காலமெல்லாம் தொடராக நோன்பு நோற்பதை அல்லாஹ் விரும்பவில்லை.

இவ்வாறே பொருட்களில் சொற்ப தொகையை ஸகாத் கொடுக்குமாறு இஸ்லாம் விதித்துள்ளது. அதுவும் பணம்,

பொருள் போன்றவற்றில் குறிப்பிட்ட தொகையை அடைந்தவர்களுக்கு மாத்திரமே அல்லாஹ் இதனைக் கடமையாக்கியுள்ளான். இதற்கு மேலாக முன்வந்து தர்மம் செய்வது அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதாகும். அவனுடைய அடியார்கள் இவ்வாறான நற்செயல்களை செய்வதை அல்லாஹ் விரும்புகிறான். அதேவேளை அவனது எல்லா முதல்களையும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்து நிந்திக்கப்பட்ட நிலையில், கையில் எதுவுமில்லாது துக்கப்பட்டவராக, தனக்கும், தனது குடும்பத்துக்குமுரிய உரிமைகள் யாவையும் தியாகம் செய்யவேண்டும் என்று அல்லாஹ் விரும்பவில்லை. மாறாக இவ்விடயத்தில் நடுநிலையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இனி ஹஜ்ஜை நோக்கினால், அது வசதி படைத்தவர்கள் தவிர்ந்த ஏனயவர்கள் மீது கடமையாக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. அத்துடன் வசதி படைத்தவர்கள் பிரயாணக் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கவேண்டும். இதிலும் அல்லாஹ் சலுகை, இலகு முதலியவற்றை வழங்கியுள்ளான். ஒரு மனிதனின் ஆயுள் காலத்தில் ஒரு முறைதான் இந்த ஹஜ்ஜைக் கடமயாக்கியுள்ளான். பிரயாணம், பாதைப் பாதுகாப்பின்றி அச்சப்பட்ட நிலையில், அல்லது போதிய வசதியின்றி இருந்தால் அதற்குரிய சூழலும், வசதியும் வரும்வரைக்கும் ஹஜ் செய்வதைப் பிற்படுத்துவதற்கு அனுமதியுண்டு. இவ்வாறே ஹஜ்ஜுக்குச் செல்லும் ஒருவனின் பெற்றோர்கள் முதியவர்களாக இருந்தால் இவனுடைய பிரிவினால் அவர்கள் நோவினைப் படக்கூடாது என்ற நோக்கில் அவர்களின் திருப்தியையும், பொருத்தத்தையும் பெறுவது அவசியமாகும். எனவே இவ்வனைத்தையும் நோக்குமிடத்து அல்லாஹ்வின் உரிமைகளை

அவனுக்காக நிறைவேற்றும் சந்தர்ப்பங்களில் மனித உரிமைகளையும் தன் கவனத்தில் கொண்டுள்ளான் என்பதை விளங்கமுடிகிறது. ஒரு மனிதன் புனித யுத்தத்தில் (ஜிஹாதில்) செய்யும் தியாகம் மனித உரிமைகளையே அர்ப்பணிக்கக்கூடிய மிகப்பெரிய தியாகமாகும். இப்புனித யுத்தத்தில் ஒரு மனிதன் தனது உயிரையும் செல்வத்தையும் பிறரின் உயிர், செல்வம் ஆகியவற்றிற்குப் பகரமாக தியாகம் செய்கிறான். அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும், அவனது ஏகத்துவத்தின் வாக்கு என்றும் ஓங்குவதற்காவுமே இத்தியாகத்தைச் செய்கிறான். அல்லாஹ்வின் பாதையில் அவனது திருப் பொருத்தத்தை மனதிற் கொண்டு எவ்வித கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்கின்றான். எனினும் புனித யுத்தத்தில் கொல்லப்பட வேண்டிய உயிர்களை மட்டுமே கொல்ல வேண்டுமென இஸ்லாம் கட்டளையிடுகிறது. வயோதிபர் களையோ, பெண்களையோ, குழந்தைகளையோ தாக்க அனுமதி கிடையாது. அதேபோல் போராடாமல் காயமுற்றவர்களையும் தாக்க அனுமதி கிடையாது. அசத்தியவாதிகளில் போராடுபவர்களை அன்றி வேறு எவருடனும் அனியாயமாகப் போராடக்கூடாது. எவ்விதக் காரணங்களும் தேவையுமின்றி எதிரிகளின் பூமியில் சென்று நியாயமற்ற முறையில் அட்டகாசம் புரிவது கூடாது. எதிரிகளின் ஊர்களைக் கைப்பற்றி வெற்றி கொண்டுவிட்டால் அவர்களுக்கிடையில் நீதமாக நடப்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். அவர்களின் உரிமைகள் எல்லாவற்றையும் பூரணமாகக் கொடுத்துவிட வேண்டும். இவர்கள் சத்தியத்தை எதிர்க்காமலும், அதற்கு எதிராகச் செயல்படாமலும், அசத்தியவாதிகளுக்கு உதவிபுரியாமலும் தம்மைத் தடுத்துக் கொண்டால் அவர்களுக்குத் தீங்கு

விளைவிக்க எந்த அனுமதியும் கிடையாது. எனவே அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்காக மனிதனின் அத்தியாவசியத் தேவைகளைத் தியாகம் செய்வதை அல்லாஹ் அனுமதிக்கவில்லை என்பதை விளங்க முடிகிறது.

## ஆத்மா சார்ந்த உரிமைகள்

ஒரு மனிதன் தனது உயிருக்குச் செய்ய வேண்டிய உரிமைகள் இரண்டாகப் பிரிவதை அவதானிக்கலாம். தாமே தமக்குச் செய்கின்ற அநீதி ஏனையோருக்குச் செய்யும் அநீதியைவிட அதிகமாக இருக்கலாம். ஒவ்வொரு மனிதனும் தனது உயிர் ஏனைய அனைத்தை விடவும் விருப்பத்திற்குரியது என்று உணர்கின்றான். எவனும் தனக்குத் தானே எதிரியாயிருப்பான் என்று கணிக்க முடியாது. எனினும் இங்கு சில விஷயங்களை ஆழமாகச் சிந்தித்து தெளிவு பெறவேண்டும். மனிதனிடத்தில் காணப்படும் இயற்கையான, வெளிப்படையான பலவீனம் என்னவெனில் அவனை மனோ இச்சை மிகைத்து விட்டால் அதற்கு முழுமையாகக் கட்டுப்படுவதாகும். அதனால் தனக்கு ஏற்படும் தீங்குகளைப் பற்றி எவ்வித கவனமும் எடுக்கமாட்டான். அதைப்பற்றி அவன் உணர்ந்தாலும், உணராவிட்டாலும் நிலைமை மாறாது. இச்சை மீது அதிக மோகம் கொண்ட ஒருவன் அதற்காகத் தன் உடல் நலத்தைப் பாதிக்கக் கூடிய நிலைமைகளையும் சகித்துக் கொண்டு தனது பணம், மானம் போன்றவற்றை அர்ப்பணிக்கின்றான். மனோ இச்சைக்கு அடிமைப்பட்ட ஒருவனைப் பார்த்தால் அவன் தன்னை அழிவின்பால் இட்டுச்செல்லும் அனைத்துச் செயல்களையும் செய்வதைக் காணலாம். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை மாத்திரம் இலட்சியமாகக் கொண்ட ஒருவரை நோக்கினால் அவர் உளத்தூய்மை கொண்டவராக,

தன்னை அதற்காக அர்ப்பணித்தவராக, அதன் வளர்சிக்காகப் பாடுபடுகிறார். அதற்காக தனக்கே தான் எதிரியாகக் காணப்படுவார். ஆசைகளையும், மனோ இச்சையையும் ஏற்படுத்தும் அனைத்து அம்சங்களையும் அஞ்சி நடப்பார். இதற்காகத் தனது அத்தியவசியத் தேவைகளைக்கூட தவிர்ந்து, திருமணம் முடிக்காமல், உண்ணல், பருகல் போன்றவற்றைக் கவனிக்காமல், உடைகளில்கூட கவனம் குறைந்த நிலையில் காணப்படுவார். இவரது பார்வையில் பாவங்கள் நிறைந்த இவ்வுலகில் மூச்சு விடுவதுகூடப் பொருத்தமற்றது எனக்கருதி காடுகளிலும் குகைகளிலும் காலம் கழித்தவராக இவ்வுலகம் அவருக்காகப் படைக்கப்பட்டதல்ல என்றும் கருதுவார். இவை ஒரு மனிதன் இவ்வுலகில் செய்யும் சில நடவடிக்கைககளுக்குரிய உதாரணங்களாகும். இவ்வாறு மனிதனின் வாழ்வில் எண்ணற்ற பல தோற்றங்களை பல சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வேறுபட்ட ரீதியில் நாம் காண்கிறோம். இஸ்லாமிய "ஷரீஅத்" ஒரு மனிதனின் சுபீட்சத்தையும் வெற்றியையும் கருத்தில் கொண்டுள்ளது. இதனால்த்தான் உறுதிமிக்க ஒரு உண்மையை அது உணர்த்துகிறது. அதாவது "உனது ஆன்மாவுக்கு உன்மீது சில உரிமைகளுண்டு" எனக் கூறுகின்றது. அதற்காக மது, அபின் போன்ற மோசமான குடிவகைகளை மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய போதைப் பொருட்களை இஸ்லாம் தடுத்துள்ளது. மேலும் இறந்தவைகள், இரத்தம், பன்றி இறைச்சி, இது தவிர தீங்கான மிருகங்கள் நச்சுத்தன்மை வாய்ந்தவைகள், அசுத்தமான மிருகங்கள் போன்றவற்றையும் இஸ்லாம் தடைசெய்கிறது. இவ்வாறான அம்சங்கள் மனிதனின் உடல் நலத்திலும், ஒழுக்கப் பண்புகளிலும், அவனது சிந்தனை உணர்வுகளிலும் தீய தாக்கங்களை ஏற்படுத்த வல்லன. இவற்றுக்குப் பதிலாக தூய்மையான, சிறந்த, உபயோகமுள்ள

உணவுகளை இஸ்லாம் அனுமதித்துள்ளது. அந்த நல்லவற்றைப் புசித்துப் பருகி இன்புறுவதை விட்டும் தன்னைத் தடுத்துக்கொள்ள வேண்டாமென்றும், தனது உடம்புக்கு உரிமையைக் கொடுக்க வேண்டுமென்றும் பணிக்கிறது. மேலும் முயற்சித்து உணவைத் தேடுமாறு கட்டளையிடும் அதேவேளை எந்த உழைப்புமின்றி வீட்டில் முடங்கிக் கிடக்கக் கூடாது என்றும், மக்களிடம் யாசகம் கேட்டு கையேந்தக் கூடாதென்றும் கூறுகிறது. தன்னைப் பட்டினியில் ஆழ்த்தி தனது உயிரைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்றும் அல்லாஹ் தனக்கருளிய சக்தியைக் கொண்டு அவன் அனுமதித்துள்ள உழைப்பைப் பெறுவதற்கு ஆகுமான வழிமுறைகளைக் கையாண்டு முயற்சி செய்யவேண்டும். வானத்திலும் பூமியிலும் அல்லாஹ் படைத்திருக்கும் காரணிகளையும், சாதனங்களையும் பயன்படுத்தி உனது வாழ்வுக்கும், ஆரோக்கியத்திற்கும் வழிவகுத்துக் கொள்ள வேண்டும். ஒரு மனிதனின் உணர்வு ஆசை முதலியவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு இஸ்லாமிய (ஷரீஅத்) அனுமதிப்பதில்லை. மாறாகத் தனது ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக திருமணம் முடிக்குமாறு கட்டளையிடுகிறது. இன்பவாழ்கையில் இருந்தும், சிறந்த வசதியான வாழ்வில் இருந்தும் தன்னைக் கட்டுப்படுத்தி அணையிட்டுக் கொள்வதை இஸ்லாம் ஏற்பதில்லை. அல்லாஹ்வை நெருங்கி, உயர்ந்த உயிரோட்டமுள்ள ஆன்மாவையும், மறுமை விமோசனத்தையும் எதிர்பார்க்கும் நீ உலக இன்பங்களை விட்டுவிடவேண்டும் என்ற எவ்விதத் தேவையுமில்லை. இவ்வுலக இன்பங்களை நுகர்ந்து, இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவைகளைத் தவிர்ந்து, அதன் ஷரீஅத் சட்டங்களைப் பின்பற்றி, அல்லாஹ்வை திக்று செய்து, தியானத்தில் ஈடுபடுவதுதான் மிகவும் பொருத்தமான செயலும்,

இவ்வுலக, மறுவுலக வாழ்வின் சுபீட்சத்திற்கு வழிவகுக்கக் கூடியதுமாகும். மேலும் இஸ்லாம் ஒருவன் தற்கொலை செய்வதைத் தடைசெய்கிறது. உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உயிர் அல்லாஹ்வுக்குச் சொந்தமானது அதை உன்னிடம் அமானிதமாகப் பாதுகாப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நீ அதனைக் குறிப்பிட்ட காலம்வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுளாய். அன்றி அவ்வுயிரை உனது கையினால் வீணாக்கி கொலை செய்து விடுவதற்காக உன்னிம் கொடுக்கப்படவில்லை.

**அடியார்களுக்குரிய உரிமைகள்:**

ஒரு மனிதன் தனது உயிருக்கும் உடம்புக்குமுரிய உரிமைகளை நிறைவேற்றுமாறு பணிக்கும் இஸ்லாமிய ஷரீஅத் இந்த உரிமைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகள் வீணாகக்கூடாது என்றும் பணிக்கிறது. ஒருவன் தனது மனோ இச்சைகளையும், தேவைகளையும் அடக்கிக் கட்டுப்படுத்தும் பட்சத்தில் ஏனையோருக்குத் தீங்கு விழைவிக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவேதான் அதனை வன்மையாகக் கண்டித்து கொள்ளையடித்தல், சூரையாடுதல், களவெடுத்தல், இலஞ்சம் வாங்குதல், மோசடிசெய்தல், ஏமாற்றுதல், வட்டியுண்ணல் போன்றவற்றை இஸ்லாம் தடைசெய்கிறது. இவ்வாறான தீய வழிகளில் இலாபம் தேடும் மனிதன் ஏனைய பலருக்குப் பல கொடுமைகளையும், தீங்குகளையும் ஏற்படுத்தி, இட்டுக்கட்டி, புறம் பேசி தீயவழியில் இலாபம் தேடுகிறான் .

எதுவெல்லாம் மற்றயோருக்கு தீங்கு விழைவிக்குமோ அவற்றைத் தடைசெய்யும் இஸ்லாம் சூதாட்டம், பந்தயம் போடுதல் போன்றவைகளையும் தடைசெய்கின்றது. இவ்வாறான தீய செயல்களெல்லாம் மனிதர்களுக்குத் தீங்கு விளைவித்தே

ஆயிரம் ஆயிரமாக இலாபமீட்டுகிறது. இவ்வாறே பணம் சம்மந்தப்பட்ட விடயங்களில் மோசடிகள் செய்தல், ஊழல்கள் புரிதல் என்பனவற்றையும் இஸ்லாம் தடுக்கிறது. இதன் மூலம் ஒரு சிலர் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறே கொலைசெய்தல், பூமியில் கிளர்ச்சிகள், பிரச்சினைகளை உண்டுபண்ணுதல் ஆகியவற்றையும் தடுக்கிறது. ஏனெனில் மனோ இச்சைகள் நிறைவேற்றப்படுவதற்கோ, தீய வழிகளில் பணம் சம்பாதிப்பதற்கோ, ஒருவனுக்கு தீங்கு விழைவிக்கவோ, பிரச்சினைகளை உண்டுபண்ணவோ, கொலை செய்யவோ எவருக்கும் அனுமதியில்லை. இவ்வாறே இஸ்லாம் விபச்சாரம் புரிவதையும் தடை செய்கிறது. ஏனெனில் அதில் ஈடுபடுபவர்களின் உடல்நலம், குணம், பண்பு முதலியவற்றிற்கு அது தீங்காக அமைந்துவிடுகிறது. அதுமட்டுமன்றி சமூகச் சீர்குலைவுகளுக்கும், அனாச்சாரங்களுக்கும் வழியாகி விடும். மற்றும் தீர்க்கமுடியாத நோய்களுக்கும், இனப்பெருக்கத் தன்மையை இழப்பதற்கும் வழி வகுத்துவிடும். இன்னும் பிரச்சினைகளை ஏற்படுத்தி மனிதாபிமானத் தொடர்புகளை வீணாக்கி நாகரீகப் பண்பாட்டு நியதிகளையெல்லாம் தகர்த்து எறிகிறது. தனது உடம்புக்கும், உயிருக்குமுள்ள உரிமைகளை நிறைவேற்றுவதுடன் ஏனைய அடியார்களின் உரிமைகளைச் சூறையாடி, பாழ்படுத்தி விடாமல் இருப்பதற்கும், மனிதனது வாழ்வு சிறப்புற்று விளங்க வேண்டும் என்பதற்கும் இஸ்லாமிய "ஷரீஅத்" அமைத்துள்ள நியதிகளும், வரையறைகளும் மேற் சொன்னவைகளே. இன்னும் மனித நாகரீகங்களும், பண்பாடுகளும், உயர்ந்து சுபீட்சம் பெறுவதற்கு ஒருவன் ஏனையோருக்குத் தீங்கு விழைவிக்காது மட்டும் இருந்தால் போதாது. அவர்களுடன் நேசங்கொண்டு, தொடர்புகளை ஏற்படுத்தி, அத்தொடர்புகளை நிலையாக்கி, ஒரு உறுதியான

சூழலை உருவாக்கி, எல்லோரும் பரஸ்பரம் நற்கருமங்களில் ஈடுபடும் நிலை ஏற்படவேண்டும். உதவிபுரியும் சந்தர்ப்பம் ஏற்படவேண்டும். மேலும் சமூக நலன்களுக்காக ஒருவருக்கொருவர் உதவிபுரியும் நிலை ஏற்படவேண்டும். இவ்வாறான உன்னத நிலை உருவாக இஸ்லாமிய "ஷரீஅத்" சில வரையறைகளையும் நிபந்தனைகளையும் அமைத்துள்ளது. அவையாவன:-

1 - மனித நேயத்தொடர்புகள் குடும்ப வாழ்கையுடன் ஆரம்பமாகிறது. இக்குடும்ப வாழ்கையில் அக்கரை காட்டுவது அவசியமாகும். கணவன், மனைவி, பிள்ளைகள் அடங்கிய ஒரு கூட்டமைப்பே குடும்பமெனப்படுகிறது. ஒரு கூட்டமைப்பின் அடிப்படையாகவே இந்தக் குடும்ப இணைப்பை இஸ்லாம் கருதுகிறது. இங்கு கணவன் என்னும் பதவி வகிப்பவர்மீது சில கடமைகளுண்டு. அவர் அக்குடும்பத்திற்குத் தேவையான செலவுகளையும், மற்றும் தேவைகளையும் உழைத்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறே அக்குடும்பத்திற்குரிய பூரண பாதுகாப்பையும் பெற்றுக் கொடுக்கவேண்டும். மனைவியின் கடமைகளும் பொறுப்புக்களும் யாதெனில் கணவனின் சம்பாதிப்பின் மூலம் வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்பதுடன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் சிறந்த முறையில் பிள்ளை வளர்ப்பைக் கவனிக்க வேண்டும். பிள்ளைகளுக்குரிய கடமைகள் யாதெனில் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு அவர்களுக்கு உபகாரம் புரிவதோடு அவர்கள் முதிய வயதை அடையும்பொழுது அவர்களுக்குப் பணிவிடையும் செய்ய வேண்டும். இக்குடும்ப ஒழுங்கு சிறத்த முறையில் நடந்தேறுவதற்கு இஸ்லாம் இரண்டு வழிமுறைகளை அமைத்துள்ளது. கணவனை குடும்பத் தலைவனாகக் கருதி,

அக்குடும்பத்தை நிர்வகித்துக் கவனிக்கக்கூடியவராக அமைத்துள்ளது. இதை நிர்வகிப்பதற்கு எவரும் இல்லாத நிலையில் அக்குடும்பம் சீராக நடக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஒருவர் ஒரு குடும்பத்தைப்பற்றிய பொறுப்புணர்ச்சி அற்றவராக செயல்படுகிறார் என்றால் அங்கு பிரச்சினையும், சீர்குலைவும் ஏற்படுவது இயல்பு. அங்கு அமைதியும், மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்பட முடியாது. இவ்வாறான பிரச்சினைகளை நீக்குவதற்காகவே ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பாளர் அவசியமாகின்றார். அவர் ஒரு ஆணாகவே இருக்க வேண்டும். ஏனெனில் அவர்தான் வீட்டு உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பதற்கும், அவ்வீட்டினர்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பாளராகவும், திகழ்கிறார். மேலும் அவரே அக்குடும்பத்திற்காக சம்பாதிப்பதற்கும், அவர்களைக் கண்காணிப்பதற்கும் தகுதி வாய்ந்தவர்.

2 - குடும்பத் தலைவன்மீது வீட்டுக்கு வெளியில் இருக்கும் கஷ்டங்களையும், சம்பாதிக்கும் பொறுப்புகளையும், கொடுத்திருப்பதைப் போன்று வீட்டுப் பெண் அத்தியாவசியமான தேவைகளுக்கன்றி வீட்டிலிருந்து வெளியேறக்கூடாது எனவும் இஸ்லாம் பணிக்கிறது. வீட்டின் உள்ளேயுள்ள பொறுப்புகளை செவ்வன நிறைவேற்றுவதற்கும், அங்கு அமைதியையும் நிம்மதியையும் ஏற்படுத்துவதற்கும், வீட்டின் வெளியேயுள்ள பொறுப்புகளை பெண்களுக்குச் சாட்டப்படவில்லை. அவள் வீட்டிலிருந்து வெளியே செல்வதனால் பிள்ளை வளர்ப்பும், அவர்களது ஒழுக்கங்களும், வீட்டின் ஒழுங்கமைப்பும் சீர் கெடக்கூடாது. என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்பது அர்த்தமல்ல. அவர்கள் வெளியே செல்லத் தேவைகள் ஏற்படும் பொழுது அனுமதிக்கப்படுகின்றனர். ஒரு பெண் தனது

கடமைகளை நிறைவேற்றுவதற்கான இடம் வீடுதான் என்பதை இஸ்லாமிய ஷரீஅத் கோடிட்டுக் காட்டுகிறது. அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சக்திகளும், விவேகங்களும் அவனின் வீட்டை சீர்படுத்துவதற்காகவேதான். வீட்டில் இருந்து அவளின் சீரிய பராமரிப்பின் மூலம் வாழ்க்கைக் கஸ்டங்களை சகித்துக்கொள்ளும் புனிதமான, சிறந்த மனிதர்கள் உருவாக வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த பந்தங்களின் மூலம், திருமணத் தொடர்பின் மூலம், குடும்பச்சுற்று விசாலமாகிறது. இவ்வாறான தொடர்பின் மூலம் சிலர் சிலருடன் தொடர்பு கொண்டு கூட்டுச்சேர்கிறார்கள் இவர்கள் தங்களுக்கிடையில் பரஸ்பரம் உதவி, ஒத்தாசைகள் புரிந்து சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென இஸ்லாம் இவர்களிடம் எதிர்பார்க்கிறது. இவர்களுள் வயது வந்தவர்களுக்கிடையில் தொடர்பு கொள்ளும் விஷயத்தில் சில நியதிகளை இஸ்லாம் வகுத்துள்ளது. அவையாவன:-

1 - குடும்பத்தில் நெருங்கிய உறவைக் கொண்ட ஆண்களும் பெண்களும் சகஜமாகக் கலந்து கூட்டு வாழ்க்கை நடாத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுள் சிலர் சிலரை மணம் முடிப்பதற்கு இஸ்லாம் தடைசெய்துள்ளது. தாய் மகனையும், தந்தை மகளையும், தாய் மணந்திருக்கும் கணவன் மூலம் கிடைத்த மகளையும், தந்தையின் மனைவி, அவரின் முந்திய மனைவிக்குக் கிடைத்த மகன், ஒரேதாய் தந்தையருக்குப் பிறந்த சகோதர சகோதரிகள், பால்குடித் தொடர்புள்ள சகோதர்கள் அத்தொடர்புள்ள சகோதர சகோதரிகள், தந்தையின் சகோதரர், அவரின் சகோதரரின் மகளும், தாயின் சகோதரியும், அவள் சகோதரியின் மகளும் மனைவியின் தாயும், அவள் மருமகனும், திருமணம் செய்து கொள்வது (ஹறாம்) தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்களுக்கிடையில்

திருமணம் செய்வது தடை செய்யப்பட்டதற்கான காரணங்களை ஆராயுமிடத்து இந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு தூய்மையானதாகும். சிறந்ததாகும். அவர்கள் அன்பிலும் பாசநேசத்திலும் தொடர்பு கொண்டு ஒன்றாகக் கலந்துள்ளனர். இதற்காக அவர்கள் எவ்விதக் கஷ்டமோ துன்பமோ அடையவில்லை. என்பதைப் பார்க்கிறோம்.

2 - மேற்கூறிய குடும்ப (உறவு)த் தொடர்புகளற்ற ஏனையோரைத் திருமணம் முடிக்குமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. இதன் மூலம் அவர்களுக்கிடையில் அன்பும், நேசமும், உறவும் அதிகரிக்கிறது. இவர்களில் சிலர் சிலரின் இயல்புகளையும், குணங்களையும், நடைமுறைகளையும் அறிந்திருந்தால் இவர்களுக்கிடையில் திருமணத் தொடர்பு அறிமுகமற்றவர்களை விடவும் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் அமைந்துவிடும். எனவேதான் இஸ்லாம் திருமண விடயத்தில் ஒப்புதலையும் பொருத்தத்தையும் ஆதரிக்கிறது. ஒரு குடும்பத்தில் ஏழையும், பணக்காரரும் உண்டு. வசதியுள்ளவர்களும், வசதியற்றவர்களும் உண்டு. இதைக் கருத்தில் கொண்டு அடியார்களுக்குரிய உரிமைகளில் மிக முக்கியமானது யாதெனில் நெருங்கிய உறவினர்களுக்குச் செய்யும் உபகாரமாகும். இதற்கு இஸ்லாமிய 'ஷரீஅத்' இரத்த பந்தங்களுடன் உறவு கொள்ளுதல் என்று கூறுகிறது. அல்குர்ஆனிலும் நபிவழியிலும் பல இடங்களில் உறவினர்களின் உறவுமுறையின் அவசியத்தை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. இந்த உறவை முறித்துக்கொள்வது பெரும் பாவம் எனவும் கணிக்கப்படுகிறது. குடும்பத்தைச் சேர்ந்த எவருக்கேனும் ஏதாவது துன்பங்கள் ஏற்பட்டுவிட்டால் அக்குடும்பத்திலுள்ள வசதி படைத்தவர்கள் உதவிக் கரம் நீட்டி

அவருக்கு உதவி ஒத்தாசைகள் புரிவது அவசியமாகும். சதகா போன்ற தர்மங்கள் கொடுக்கும் பொழுது நெருங்கிய உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

3 - இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம் அமைக் கப்பட்டிருப்பதை நாம் காணமுடிகின்றது. அதாவது எவரேனும் ஒருவர் மரணமாகி அவர் தனது சொத்துக்களை விட்டுச் சென்றிருந்தால் அது அனந்தரச் சொத்தாகக் கணிக்கப்படும். பணமும், சொத்துக்களும் ஒரே இடத்தில் தேங்கிக் கிடப்பதற்கு அனுமதி கிடையாது. மாற்றமாக அல்குர்ஆனில் விவரிக்கப்பட் டுள்ளது போன்று மரணமெய்தியவரின் உறவினர்களில் நெருங்கியவர்களுக்கு அவரவருக்குரிய உரிமைகளைப் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும். அவர்களுள் அவருக்கு நெருக்கமான உறவு முறையிலுள்ளவர்களைப் பொறுத்து அவர்களின் பங்குகளிலும் வித்தியாசங்கள் ஏற்படலாம். ஒரு மனிதன் விட்டுச் சென்ற பொருளை அவரது உறவினர்களில் பலர் அனுபவித்து இன்புறுகின்றனர். இஸ்லாத்திலுள்ள இவ்வாறான சட்ட விதிகளுக்கு ஈடாக உலகச் சட்டங்களில் அன்றும் இன்றும் இணையாக ஒன்றும் கிடையாது. என்றாலும் இன்றய உலகில் பல சமூகங்கள் இவ்வாறான சட்ட விதிகளைப் பின்பற்ற ஆரம்பித்துள்ள அதேவேளை முஸ்லிம்களில் அதிகமானோர் அறியாமை, மடமை ஆகிய காரணங்களால் இஸ்லாத்திற்கு மாற்றமாக செயல்படத் தொடங்கியுள்ளனர். அல்குர்ஆனின் தெளிவான சட்டவிதிகளுக்கு மாற்றமாகப் பெண்களுக்கு வாரிசுரிமை மறுக்கப்படும் பகிரங்க அநியாயம் பரவியிருப்பதைக் காணலாம்.

4 - குடும்பத் தொடர்புகளுக்கு அடுத்து ஒரு மனிதன் தனது நண்பர்கள், அண்டை வீட்டார், தான் வாழும் பகுதியில் வாழ்பவர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்கிறான்.

அவர்களுடன் பல வழிகளில் நேச உறவு வைக்கின்றான். அவர்களுடன் உண்மையுடனும், நல்லொழுக்கத்துடனும் பழகுமாறு இஸ்லாம் பணிக்கிறது. இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்ட நற்செயல்களுக்காகவும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிகள் புரியவேண்டும் என்றவகையில் ஏனயவர்களின் தீமைகளிலிருந்து ஒருவனைப் பாதுகாப்பதை இஸ்லாம் விரும்புகிறது. நெருங்கிய உறவினர்களுக்கான உரிமைகள் விஷயத்தில் ஏனையோரைவிட வேறுபட்டாலும் அண்டை வீட்டாருக்குச் சில உரிமைகள் அடுத்து வருகிறது. **நபி (ஸல்) அவக்ளின் அண்டை வீட்டவர்கள் நபியவர்களின் சொத்தில் அனந்தரம் பெறும் தகுதி பெற்று விடுவார்களோ என்று கருதும் அளவிற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் அண்டை வீட்டாரின் உரிமை பேணுவதுபற்றி நபியவர்களுக்கு உபதேசித்து வந்தார்கள்.**

நபி (ஸல்) அவர்களின் அயல் வீட்டில் வசித்து வந்த யூதர் ஒருவர் காணாமல் போனபோது நபி (ஸல்) அவர்கள் அவனைத் தேடிச் சென்றிருக்கிறார்கள். இதுவெல்லாம் அயல் வீட்டாரின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாக அமைகிறது. இன்னும் முஸ்லிம்களில் ஒரு மனிதன்மீது ஏனையோருக்குப் பல உரிமைகளுண்டு. அவர்கள் பசியோடிருந்தால் அவர்களுக்கு உணவூட்ட வேண்டும். அவர்களுள் ஆடையற்றவர்களுக்கு தன்னால் முடிந்த அளவு ஆடைகள் கொடுத்து உதவ வேண்டும். பல வழிகளிலும் தாக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும். அவர்களில் நோயுற்றவர்களைச் சந்திக்கச் செல்ல வேண்டும். வழி தவறியவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். தொழில் புரிந்து சம்பாத்தியம் செய்ய சக்தியில்லாதவர்களுக்கு அவர்களின் குடும்பத்தைக் கவனிப்பதற்கு ஏற்ற தொழிலைத் தேடிக் கொடுக்க வேண்டும்.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரனாவான். அவனுக்கு அநியாயம் செய்யவோ, அவனைக் காட்டிக் கொடுக்கவோ மாட்டான். (நபிமொழி)

**இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். (அல்குர்ஆன்- அல் மாயிதா: 2)**

**நிச்சயமாக மு.:மின்கள் யாவரும் சகோதரர்களே (அல்குர்ஆன்- சூரா அல்ஹுஜ்ராத்:10)**

இதுவல்லாத இன்னும் பல தொடர்புகளும் உரிமை களும் முஸ்லிம்களுக்கு மத்தியில் உரிமை பெற்றவர் களுக்கு உண்டு.

"(நபியே!) **முஷ்ரிக்களில் யாரேனும் உம்மிடம் புகலிடம் தேடி வந்தால் அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக! அதன்பின் அவருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வேறு இடத்திற்கு அனுப்புவீராக! (அல்குர்ஆன்- சூரா அத்தவ்பா:10)**

மேற்கூறப்பட்ட குறுகிய கூட்டமைப்பை விட்டும் உனது பார்வையைக் கொஞ்சம் திருப்பினால் விசாலமான கூட்டமைப்பைக் காணமுடிகிறது. அதுதான் உலக முஸ்லிம்கள் அனைவரையும் உள்ளடக்கக்கூடிய சர்வதேச கூட்டமைப்பாகும். இப்பரந்த கூட்டமைப்புடன் தொடர்பு கொள்வதற்கு இஸ்லாம் பல விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் அமைத்துள்ளது. அதனால் முஸ்லிம்கள் அனைவரும் நன்மையிலும், பயபக்தியிலும், நற்கருமங்களிலும் அவர்களுக்கிடையில் பரஸ்பரம் உதவி ஒத்தாசைகள் புரியக்கூடியவர்களாக மாறிவிடுகின்றனர். இதனால் அவர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும், மானத்திற்கும் பாதுகாப்புப் பெற்ற ஒரு சூழலில் வாழ்கின்றனர். இந்நிலை

உருவாவதற்கு இஸ்லாம் அமைத்துள்ள நிபந்தனைகள் பின்வருமாறு:-

1. திருமணம் முடிப்பதற்கு ஆகுமான ஆண்களும் பெண்களும் ஒன்றாகக் கலந்திருப்பதை இஸ்லாம் தடைசெய்கிறது. இதனால் ஒழுக்கமும், மானமும் பாதுகாக்கப்பட வழி பிறக்கிறது. அனுமதிக்கப்படாத விஷயங்களைப் பார்ப்பதை விட்டும் பார்வையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டுமென்றே அல்லாஹு'வின் கட்டளை வந்துள்ளது. மூமினான ஆண்களுக்கும், பெண்களுக்கும் தூய்மையான வழிமுறை இதுதான். என்பதையும் விளக்கிவிட்டடான். ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் தொடர்பு ஏற்படுத்துவதின் ஆரம்பமே பார்வைதான்.

**அல்லாஹ் கூறுகிறான்:- (நபியே) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர்கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும். தங்கள் கற்பை பாதுகாத்துக் கொள்ளவும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். (அல்குர்ஆன்: அந்நூர்:30)**

பெண்கள் செய்வதற்கென்றே சில செயல்களை அல்லாஹ் அமைத்துள்ளான். அவற்றை ஆண்கள் செய்வது கடினமாகும். இவ்வாறே ஆண்களுக்கென்று சில செயல்களைக் குறிப்பிட்டுள்ளான். அவற்றைப் பெண்கள் செய்யமுடியாது. பெண்களை வீட்டில் இருக்குமாறும், அவ்வீட்டை அமைதியான இடமாகவும், ஓய்வு பெறும் தளமாகவும் அமைத்து சிறந்த முறையில் பராமரிக்குமாறும் ஆண்களுக்கு அமைதியையும், சாந்தியையும் ஏற்படுத்தும் வகையில், அவர்களுக்கு ஆடையாகவும் பெண்களை அல்லாஹ் அமைத்துள்ளான். ஆண் வாழ்கைச் சுமைகளைச் சுமந்துகொண்டு பகற்பொழுதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கியபின் மாலையில் ஓய்வையும்,

அமைதியையும் எதிர்பார்த்து வீடு திரும்புகிறான். அவ்வேளையில் வீட்டில் இருக்கும் தனது மனைவியிடம் தனக்குத் தேவையான உணவையும், பானங்களையும், ஓய்வுக்கான வசதிகளையும், பெற்றுக்கொள்கிறான். ஆனால் இதற்கு மாற்றமாக மனைவி கடைகளிலும், தொழிற் சாலைகளிலும் ஈடுபட்டால் அவளும் ஆண்களைப் போன்று தனது தொழிலை முடித்து களைத்தவளாக வீடு திரும்புவாள். அவள் தனக்குத் தேவையான ஓய்வைப் பெறுவதற்கும், அவளது கணவனுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்யவும் முடியாமல் போய்விடுகிறது.

2. பெண்கள் தங்களது அழகைக் காட்டிக்கொண்டு திறந்த நிலையில் வெளியே செல்வதை இஸ்லாம் தடை செய்கிறது. இதனால் ஆண்கள் தீய விளைவுகளை எதிர்நோக்குவதுடன் அவர்களின் உணர்வுகள் தூண்டப்பட்டு பாவங்களில் விழுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. எனவேதான் அது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்களால் பெண்கள் பிரச்சினைக்கு ஆளாகக் கூடாது என்பதற்கும், அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும், இத்தடை வழி வகுக்கிறது. ஆண், பெண் இரு சாராரும் பிரச்சினைகளை எதிர்நோக்கக் கூடாது என்பதற்காக பொருத்தமான உடைகளை அணியுமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது.

3. மனிதப் பண்புகளைப் பாழாக்கும் கேளிக்கைகளையும், வீண் விளையாட்டுக்களையும் இஸ்லாம் விரும்புவதில்லை. இவை கீழ்த்தரமான மனோ இச்சைகளைத் தூண்டுவதற்கும், அவர்களின் பெறுமதிமிக்க நேரம், அவர்களின் ஆரோக்கியம், பணம் போன்றவற்றை வீணாக்கக் கூடியனவாகவும் அமைகிறது.

4. முஸ்லிம்களின் ஒற்றுமையையும், அவர்களின் மகிழ்ச்சியையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களிடம் பிரிவினை வாதத்தையும், கட்சி வாதத்தையும் விட்டுத் தூரமாகி, பிளவுகளையும், கருத்து வேறுபாடுகளையும் விட்டுவிடவேண்டும் என்று இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கிறது. முஸ்லிம்கள் தமக்கிடையில் ஏதாவதொரு விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டால் தூய எண்ணத்துடன் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின்பால் திரும்பி அவற்றிலிருந்து அதற்கான தீர்வைப் பெறவேண்டும். எந்தவொரு அம்சத்திலும் ஒன்றுபடவில்லை என்றால் அதனை அல்லாஹ்விடம் பாரம் சாட்டிவிடவேண்டுமே தவிர அவர்களுக்கிடையில் பிழவுபடக்கூடாது. அவர்களுள் கூட்டாக வெற்றி, மகிழ்ச்சி என்பனவற்றிற்கு இட்டுச் செல்லும் செயல்களில் பரஸ்பரம் உதவி புரிந்து ஒன்றுபட வேண்டும். அவர்களை அதிகாரம் செலுத்தும் தலைவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். பிரச்சினைகளை வளர்க்கும் தீயவர்களை விட்டும் ஒதுங்கிவிட வேண்டும். இஸ்லாமிய சமூகத்திடையே பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடாது. தமது சக்திகளை வீணாக இழக்காது பாதுகாக்க வேண்டும்.

5. பலதரப்பட்ட அறிவுகளையும், நவீன கலைகளையும் முஸ்லிம்கள் பெற்றுக் கொள்வதற்கு இஸ்லாம் பூரண அனுமதி வழங்குகிறது. முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும்கூட பயனுள்ள கல்வியைக் கற்றுக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி வழங்குகிறது. ஆனால் முஸ்லிம்களின் நடை முறை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஒப்பாக இருப்பதை முற்றாகத் தடைசெய்கிறது. ஏனெனில் இந்த சமூகம் வேறொரு சமூகத்திற்கு ஒப்பாக முடியாது. ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தைப் பின்பற்றுவதாயின் தம்மிடம் பலவீனமும், இழிவும்

இருப்பதை ஒப்புக்கொள்வதுடன் மற்றயதில் முன்மாதிரியும், உயர்ச்சியும் இருப்பதாகக் கருதுகிறது. இந்நிலை அடிமைப்படுவதிலும் மிக மோசமானதாகும். வீழ்ச்சியையும், தாழ்மையையும் ஏற்றுக்கொள்வதாகும், இம்மாதிரியான தாக்கங்களினால் ஒப்பாகி பின்பற்றப்படும் சமூகக் கலாச்சாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவேதான் நபிகள் (ஸல்) அவர்கள் வேற்று சமூகங்களைப் பின்பற்றுவதையும், அவர்களின் கலாச்சாரங்களைத் தேர்ந்தெடுப்பதையும் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். ஒரு சமூகத்தின் உயர்ச்சி அதன் வெளித் தோற்றத்திலோ, உடைகளிலோ இருப்பதில்லை என்பதை சிற்றறிவுள்ள ஒருவனால்கூட விளங்கிக் கொள்ள முடியும். அதன் உயர்ச்சியும், ஆற்றலும் அதன் அறிவு வளர்ச்சியிலும், சிறந்த ஒழுக்க அமைப்பு, முயர்ச்சி போன்றவற்றிலுமே அமையப் பெறுகிறது. எனவே (எந்த) சமூக உயர்வு, வல்லமைகள், பூரணத்துவம் கொண்ட கலாச்சார அமைப்புகள் போன்றவற்றை எதிர்பார்ப்பதாயின் ஏனைய சமுகங்களின் உயர்சிக்கும், சிறப்பிற்கும், சக்திக்கும் வழி வகுத்த அம்சங்களைப் பின்பற்றலாம். இதற்கு மாற்றமாக சமூகங்களைக் கோழைகளாக மாற்றிய விஷயங்களையும், அழிவின்பால் இட்டுச் செல்லும் விடயங்களையும் பின்பற்றி அந்தச் சமூகங்களின் பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்வதனால் தங்களது தனித் தன்மையையும், இலட்சியங்களையும் இழந்து விடுவர்.

குறிப்பாக முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்களுடன் இனவாதம், குறுகிய மனப்பான்மையுடன் செயல்படுவதை இஸ்லாம் முற்றாகத் தடைசெய்கிறது. அவ்வாறே அவர்களின் சிலைகளைச் சாடுவதையோ, அவர்களின் மதிப்பிற்குரிய

தலைவர்களைக் குறை கூறுவதையோ, அவர்களின் மார்க்கத்தை இழிவாகப் பேசுவதையோ இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களுடன் வீண் குதர்க்கங்களுக்குச் செல்லாமல் நலினமாக அல்லாஹ்வின் பால் அழைக்க வேண்டும். முஸ்லிமல்லாதவர்கள் முஸ்லிம்களுடன் இணக்கம் கொண்டு, சேர்ந்து நடப்பதற்கு நாடினால் அவர்கள் இஸ்லாமிய (த.ஃவா) பிரச்சாரத்திற்கு இடையூறு ஏற்படாது சந்தர்ப்பம் அளித்தால், அல்லாஹ்வின் பாதையில் முயற்சிப்பதைத் தடுக்காமலும் இருப்பார்களாயின் அவர்களை எதிர்க்காது, அவர்களுடன் இணைந்து, நேசம் வைத்து நடப்பது அவசியமாகும். உயர்ந்த பண்பாடுகள், மனிதாபிமானம், சமத்துவம், அன்பு மனப்பான்மை ஆகிய சிறந்த பண்புகளுடன் முஸ்லிம் அல்லாதோருடன் பழகுமாறு சிறப்பிற்குரிய இஸ்லாம் எம்மைக் கட்டாயப் படுத்துகிறது. அல்லாஹு"வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கத்தின்பால் அவர்களை அழைக்குமாறும், அவர்களுக்கு உபதேசம் புரியுமாறும் இஸ்லாம் எமக்குக் கட்டளையிடும் அதேவேளை குறுகிய நோக்கம், அநியாயம், தீய பண்பாடுகள், இனவாதம் ஆகியவற்றால் முஸ்லிம் அல்லாதவர்களுடன் செயல்படக் கூடாது என இஸ்லாமியச் சட்டங்களும், ஒரு முஸ்லிமின் இயல்புகளும் எடுத்துக் கூறுகின்றன. தாராள மனப்பான்மை, நற்குணம், நல்லொழுக்கங்கள், சிறந்த பண்பாடுகள் ஆகியவற்றை முன்மாதிரியாக முஸ்லிம் அல்லாதவர்கள் பெறவேண்டும் என்பதற்காகத்தான் ஒரு முஸ்லிம் மனிதர்களின்பால் அனுப்பப்பட்டுள்ளான். குறைவுகளற்ற, தீமைகளற்ற, நேர்மை சத்தியத்தின்பால் அமையப் பெற்றிருக்கும் ஒரு முஸ்லிமின் தூய்மையான வாழ்க்கையின்பால் வேற்று மதத்தினர்கள் ஈர்க்கப்படவேண்டும். முஸ்லிம்களிடம் ஒருவர்

புகழிடம் தேடி வந்தால் அவருக்கு அபயமளிப்பதுடன் அவருடைய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென அல்லாஹ் கூறுகிறான்.

**"(நபியே!) முஷ்ரிக்களில் யாரேனும் உம்மிடம் புகழிடம் தேடி வந்தால் அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக! அதன்பின் அவருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வேறு இடத்திற்கு அனுப்புவீராக! (அல்குர்ஆன்- சூரா அத்தவ்பா:10)**

முஸ்லிம் அல்லாத ஒருவர் புகழிடம் தேடிவந்தால் அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்து அவருக்குச் சத்தியத்தைக் கேட்கச் செய்தபின் அவரைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்வது ஒரு முஸ்லிமின் மீது கடமையென அல்லாஹ் கூறுகிறான்.

**ஏனைய படைப்புகளுக்குரிய உரிமைகள்**

உரிமைகளின் தொடரிலே நான்காவது வகையை விளக்குவதற்கு நாம் இங்கு விளைகின்றோம். அல்லாஹ் மனிதனை மற்றய எல்லாப் படைப்பினங்களை விடவும் சிறப்பித்துள்ளான். ஏனைய படைப்புகளை மனிதனுக்குக் கட்டுப்படச்செய்து, அதிலிருந்து தேவையான பிரயோசனங்களைப் பெறுவதற்கு அனுமதி அளித்துள்ளான். இது பூமியிலே படைக்கப்பட்டிருக்கும் சிறந்த படைப்பு மனிதன் என்ற ரீதியில் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையாகும். எனினும் அல்லாஹ் இப்படைப்புகளுக்கு சில உரிமைகளை மனிதனிடத்து அமைத்துள்ளான். அதாவது முக்கிய தேவைகளுக்கன்றி அவைகளை வீணாக்கவோ, அவற்றுக்குத் தீங்கு செய்யவோ கூடாது. அவற்றைப் பயன்படுத்தி அனுபவிப்பதற்கு சிறந்த வழிமுறைகளைக் கையாளவேண்டும். இவ்வாறான பல அம்சங்கள் பொருந்திய

சட்டங்களை ஷரீஅத் எடுத்துக் கூறுகிறது. உணவுக்காக, அல்லது அவைகளின் தீங்குகளைத் தவிர்ப்பதற்காக, கால்நடைகளைக் கொல்லுவது மனிதனுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. வீணாக மிருகங்களைக் கொல்லுவதை இஸ்லாம் தடைசெய்கிறது. சாப்பிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்களின் இறைச்சியை பயன்படுத்துவதற்கு சிறந்த வழிமுறையாவது அறுத்துச் சாப்பிடுவதாகும். மிருகங்களை அறுக்காமல் வேறு வழிகளில் கொலைசெய்து சாப்பிடுவதற்கு அனுமதி இல்லை. அத்துடன் சாகாத ரீதியிலும் அனுமதியற்றதாகக் கணிக்கப்படுகிறது. சித்திரவதைக்கு உட்படுத்தி மிருகங்களைக் கொல்லுவதையும் இஸ்லாம் வன்மையாகத் தடைசெய்கிறது. மேலும் நச்சுத் தன்மை படைத்த பிராணிகளையும், தீங்கிழைக்கும் மிருகங்களையும் கொலை செய்ய அனுமதி வழங்குகிறது. இவ்வாறான மிருகங்கள், பிராணிகள் ஆகியவற்றின் உயிர்களிலும் பார்க்க மனித உயிர் பெறுமதி மிக்கதாகவும், மதிப்பு வாய்ந்ததாகவுமே கணிக்கப்படுகிறது. இன்னும் பொதி சுமப்பதற்குப் பயன்படுத்தப்படும் மிருகங்களாயினும் சரி சவாரி செய்வதற்குப் பயன் படுத்தப்படும் மிருகங்களாயினும் சரி அவைகளின் சக்திக்கு மேற்பட்ட பொதிகளை அவற்றின் மீது ஏற்றுவதோ, அவைகளைக் கடுமையாக அடிப்பதோ, பசியில் போடுவதோ பாவமாகும். இதுபோலவே பறவைகளைக் கூட்டில் அடைத்து கொடுமைகள் செய்வதும் கூடாது. மிருகங்கள் பறவைகள் ஒருபுறமிருக்க தேவைக்கன்றி மரங்களையும், அதன் கனிகள், பூக்கள் ஆகியவற்றைக்கூட வெட்டி நாசம் செய்வதை இஸ்லாம் தடைசெய்கிறது. உயிருள்ள தாவரங்கள், மரங்கள் ஒருபுறமிருக்க உயிரற்றவைகளைக்கூட நாசம் செய்வதையும், தண்ணீரை வீண்விரயம் செய்வதையும் தடைசெய்கிறது.

**நிலையான சர்வதேச மார்க்கம்:**

மேலே நாம் விளக்கிய அம்சங்கள் அனைத்தும் தூய மார்க்கமான இஸ்லாத்தின் சுருக்கமான சட்டங்களும் விதி முறைகளுமாகும். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இவ்வுலக மாந்தர்கள் அனைவருக்குமாக அனுப்பப்பட்ட நபியாவார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாம் உலகளாவிய மார்க்கமேயாகும். இம்மார்க்கத்தின் கொள்கை, கோட்பாடுகளிலேயே தவிர மற்ற ஒன்றிலும் மனிதர்களுக்கிடையில் வேறுபாடுகள் கிடையாது. பிறப்பு, தேசம், நிறம், ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்களுக்கு மத்தியில் வேறுபாடு, பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள மார்க்கங்கள், கொள்கைகள், அனைத்தும் சர்வதேச ரீதியானதாக இருக்க முடியவே முடியாது. ஒரு இனத்தில் பிறந்தவன் இன்னொரு இனத்தில் பிறந்தவனைவிட எவ்வகையிலும் உயர்ந்தவனாக இருக்க முடியாது. இவ்வாறு மனிதனை தேச, இன, அடிப்படையில் வகுத்துக் காட்டும் மதங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மாத்திரம் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் இவை அனைத்துக்கும் மேலாக இஸ்லாம் ஒரு சர்வதேச மார்க்கமாகத் திகழ்கிறது.

எவர் **லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம் மதுர்ரசூலுல்லாஹ்** என்ற நம்பிக்கையை ஏற்றுக் கொள்கிறாரோ அவர் இஸ்லாமிய சமூகத்துள் நுளைவதற்கு பூரண அருகதை பெறுகிறார். ஏனைய முஸ்லிம்கள் பெறும் சலுகைகள் உரிமைகள் அனைத்தையும் இவரும் பெறுகின்றார். இந்த இஸ்லாமிய ஷரீஅத்தில் இனம், மொழி, தேசம், ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வித வேற்றுமையும் இல்லை. இதன் சட்டங்கள், விதிமுறைகள் குறிப்பிட்ட காலத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மரபுகள்,

இயல்புகளை மையமாக வைத்தோ அமையப் பெற்றதல்ல. மாறாக இது நிலையான சட்டங்களை உள்ளடக்கிய மார்க்கமாகும். இது எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்க்கும் பொருத்தமாகவும், மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்திலும் அமைந்துள்ளது. மனிதனைப் படைத்த இறைவன்தான் இந்த இஸ்லாமிய சட்டத்தையும் அமைத்துள்ளான். ஆகவே அவன் இதை மனித இயல்புகளுக்கும், எல்லா சந்தர்ப்பங்களுக்கும் எல்லா இடங்களுக்கும், பொருந்தும் விதத்தில் அமைத்துள்ளான். எனவே எமது இறுதியான பிரார்த்தனை அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும் உரித்தாகுக என்பதாகும்

## هذا الكتاب يحتوي على:

---

* معنى الإسلام وحقيقته.
* السبيل إلى معرفة أمر الله وشرعه.
* معرفة الأنبياء والدلائل على صدقهم.
* أركان الإسلام والإيمان.
* بيان أن تطبيق الشريعة عبادة لله وأنها جاءت لحفظ الضرورات الخمس (الدين، والعقل، والنفس، والمال، والعرض).
* مصادر الشريعة.
* الجهاد في سبيل الله.
* الحقوق الواجبة على الأفراد.

# مبادئ الإسلام

باللغة التاميلية

# المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات في منطقة البطحاء

تحت إشـــراف
وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد


ص.ب: ٢٠٨٢٤ الرياض ١١٤٦٥
هاتف: ٤٠٣٠٢٥١
٤٠٣٠١٤٢
٤٠٣٤٥١٧ ــ ١- ٠٠٩٦٦
٤٠٣١٥٨٧
فاكس: ٤٠٥٩٣٨٧

هاتف وفاكس صالة المحاضرات بالبطحاء
٤٠٨٣٤٠٥ - ١- ٠٠٩٦٦


حقوق الطبع محفوظة للمكتب

لا يسمح بطبع أي جزء من هذا الكتاب إلا بعد موافقة خطية مسبقة من المكتب



مطابع الحميضي هاتف: ٤٥٨١٠٠٠ فاكس: ٤٥٩٢٢١٧

# مبـادئ الإسـلام

باللغة التاميلية

تأليـف

حمود بن محمد اللاحم

ترجـمة

نوفر صديق ( غفوري )

# مبادئ الإسلام

باللغة التاميلية

إعداد

حمود بن محمد اللاحم

ترجمة

نوفر صديق ( غفوري )


برنامج

وفرعها في السماء

دعوة للمساهمة في دعم

حصة أنشطة للمكتب

بمبلغ خمسين ريال

توزع كالتالي :

١٠

١٠

١٠
صدقة جارية

١٠
تبرع عام

١٠

٥٢

للمساهمة في البرنامج

الإيداع في المصرف رقم ٤/ ٦٣٩٠ فرع ١٨٥ الراجحي وإرسال صورة الإيداع على فاكس المكتب ٤٠٥٩٣٨٧

أو التكرم بالحضور إلى مقر المكتب أو التحويل عن طريق المصرف الآلي إلى الحساب رقم ١٨٥٠٠٦٣٩٠٤



المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالبطحاء

تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

هاتف : ٤٠٣٠٢٥١ - ناسوخ : ٤٠٥٩٣٨٧ - ص.ب ٢٠٨٢٤ - الرياض ١١٤٦٥